பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 06 செவ்வாய்க்கிழமை 21.12.2021 கதிர் 46

**இது ரகசியம் அல்ல!**

அமுல் பேபியின் அலப்பறை - அட்டகாசம் - வடக்கில் அடங்குவதாக இல்லை. பேயாட்டம் போடுகின்றது. அதனால் 'என் கனவு பாழ்' திட்டத்தின் நாச நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன.

வடக்கை கவனிக்காத ராஜபக்ஷக்களின் பக்கம்02



# '13' நமக்கு தீர்வுமல்ல; ஆரம்பப் புள்ளியுமல்ல!

## அடித்துக் கூறுகின்றார் விக்னேஸ்வரன்

கொழும்பு, டிசெம்பர் 21

பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்றுமே தீர்வாகாது என்பதை நான் முற்றிலும் ஏற்கின்றேன். அதுவே தீர்வு என்று நான் எந்தக் காலத்திலும் கூறவில்லை. கூறவும் மாட்டேன். அதனை தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஆரம்பப் புள்ளியாகவும் ஏற்கமுடியாது.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் யாழ்.மாவட்டம் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

'வாரத்துக்கொரு கேள்வி' என்ற அவரது கேள்வி - பதில் 12

# 24 மணிநேரத்தில் வடக்கு கடலில் 69 இந்திய மீனவர்கள் சிக்கினர்!

## யாழ்.எழுவைதீவு அருகே நேற்று 14 பேர் கைது; தமிழகத்தில் வெடித்தது கண்டனப் போராட்டம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 21

யாழ்ப்பாணம் - எழுவைதீவு அருகே நேற்று மீன் பிடித்துக் கொண்டிருந்த 14 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டமையுடன் 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 2



# மக்கள் ஆணை தந்த விடயத்துக்கு மாத்திரமே தமிழரசு ஒப்பமிடுமாம்

## அரசியல் குழு நேற்றுக் கூடி முடிவு

(ந.லோகதயாளன்)

கொழும்பு, டிசெம்பர் 21

கொழும்பில் இன்று முற்பகல் கூடும் தமிழ் பேசும் மக்களின் கட்சித் தலைவர் களின் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்குபற்றும். ஆனால் கடந்த பன்னிரண்டு ஆண்டு களாகப் பல்வேறு தேர்தல்களில் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஊடாகத் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற விடயங்களுக்கு உட்பட்டதான ஆவணங்களில் மட்டுமே தமிழரசுக் கட்சி கையெழுத்திட வேண்டும்.

- இப்படி தமிழரசுக் கட்சி இன்று தீர்மானித்துள்ளது.

இலங்கைத் 12

# யாழில் திடீர் மூச்சுத் திணறலால் ஒன்றரை வயது குழந்தை மரணம்

திடீர் மூச்சுத் திணறல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது. 2

# கிளிநொச்சியில் சடலமாக மீட்கப்பட்ட ஆசிரியையின் மரணத்தில் சந்தேகம்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜெயந்திநகர் பகுதியில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்ட ஆசிரியையின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ள காரணத்தால், நேற்று 12

# ரஞ்சனை உடனே விடுதலை செய்க!

## ஜனாதிபதியிடம் மனோ கோரிக்கை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பொதுமன்னிப்பை வழங்கி அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தமிழ் முற்போக்குக் 2



# எரிபொருள் விலை அதிரடியாக உயர்வு

நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, ஒரு லீற்றர் ஒக்டைன் 92 வகையைச் சேர்ந்த பெற்றோலின் விலை 157 ரூபாவிலிருந்து 177 12

# மன்னார் பிரதேச சபையில் கைகலப்பு; 2 உறுப்பினர்கள் வைத்தியசாலையில்

(மன்னார் நிருபர்)

மன்னார் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்ட அமர்வின்போது நேற்று ஏற்பட்ட கலவரத்தில் இரு உறுப்பினர்கள் காயமடைந்துள்ள நிலையில் மன்னார் பொது 12






சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

தென்னாடு மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

**காலம்** - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)

இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அசிரத்தையும் அமுல்பேபியின் அராஜக நிர்வாகத்துக்கு வசதியாகப் போய்விட்டது.

வடக்கில் பிரதேச அபிவிருத்திக்கு மக்கள் பிரதிநிதிகள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பல நூறு கோடி ரூபா நிதியை தம் கைவசம் எடுத்துப் பந்தாட அமுல்பேபி வகுத்திருக்கும் சதித் திட்டம் பெரும் சாணக்கியம்.

வடக்கில் மாவட்ட ரீதியான அபிவிருத்திக்கு அப்பால் பிரதேச ரீதியான அபிவிருத்திக்கென ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அடையாளம் காணும் திட்டங்களுக்குத் தலா நூறு மில்லியன் (பத்துக் கோடி) ரூபாவும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் உதவித் தலைவரின் திட்டங்களுக்குத் தலா இரண்டு கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கில் உள்ள பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களோ, உதவித் தலைவர்களோ இன்னும் நியமிக்கப்படவில்லை.

அதனால் அவை எல்லாவற்றுக்கும் தாம் ஒருவரே ஏகத் தலைவர் என்று அமுல் பேபி கூறும் வியாக்கியானத்தை 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று பணியாற்ற வேண்டிய அதிகாரி, அதை மறந்து – துறந்து – தலையாட்டிச் சேவகனாக அப்படியே தலையசைத்து, சிரம் பணிந்து, ஏற்றுக் கொள்வதால், இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளினதும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள், உதவித் தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 180 கோடி ரூபாவும் முழுமையாக அமுல் பேபியின் கையில் அப்படியே சிக்கி அமுங்கும் ஆபத்து நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேசமயம், உள்ளூராட்சி சபையின் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தலா 40 லட்சம் ரூபாவும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுக்கு தலா முப்பது லட்சம் ரூபாவும் இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளது. இது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் ஏற்பாடு. இலங்கை முழுவதுக்குமான ஒழுங்குமுறை.

ஆனால் வடக்கில் மட்டும் இப்படி முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிசபையின் தற்போதைய உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியையும் சூறையாடி 'என் கனவு பாழ்' திட்டம் ஊடாக கையாட – சூறையாட – அமுல் பேபி தயாராகிவிட்டார்.

பிரதேச அபிவிருத்திக்கான கூட்டங்கள் நேற்றும் இன்றும் பிரதேச ரீதியாக நடக்கின்றன. பிரதேச அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்யும் இக் கூட்டத்துக்கு சுற்று நிருபத்துக்கு அமைவாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட வேண்டும்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்த ஒரு முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்கும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினருக்கும் அழைப்பு அனுப்பக் கூடாது என பிரதேச செயலகங்களுக்கு அமுல்பேபி தரப்பால் கடுமையான உத்தரவு போடப்பட்டிருக்கின்றது.

மாவட்டத்தின் தலைமை அதிகாரியே தலையாட்டி பொம்மை என்றால், பிரதேச அதிகாரிகள் என்ன செய்வர்? 'என் கனவு பாழ்' திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தைப் பாழாக்கும் அராஜகத்துக்கு அவர்களும் துணை போகத்தானே வேண்டும்?

அமுல்பேபியின் அடாவடித்தன உத்தரவுக்குப் பயந்து சம்பந்தப்பட்டோருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. ஒரு பிரதேச செயலகத்தினால் ஒரு முன்னாள் மாகாணசபை உறுப்பினருக்கு அழைப்பு அனுப்பப்பட்ட பிற்பாடு, அவரை வர வேண்டாம் என்று மீண்டும் தொலைபேசி மூலம் கூறப்பட்டுள்ளது.

சில பிரதேச செயலகங்களினால் அழைப்புக் கடிதங்கள் தபால் நிலையங்களில் அஞ்சலிடப்பட்ட பின்னர், தபால் நிலையங்களுக்குச் சென்று அவற்றை அஞ்சல் – விநியோகம் – செய்ய வேண்டாம் என்று திரும்பப் பெற்று வந்துள்ளனர் பிரதேச செயலக அதிகாரிகள்.

ஊரார் பணத்தைச் சூறையாடி, உலையிலிட்டு, 'என் கனவு பாழ்' திட்டத்தை அரங்கேற்றும் அமுல்பேபிக்கு குடாநாட்டு மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும். ஆனால் பிச்சைக்கு ஏங்கும் 'பாழ் தேசத்து' மக்கள்தாம் நாம் என்பதை வாக்களிப்பில் காட்டி – எச்சில் எலும்புக்கு ஏங்கிப் பின்னால் வாலாட்டிச் செல்லும் நான்கு. கால் மிருகங்களை ஒத்த பண்பியல்பு மூலம் வெளிப்படுத்தி வருகின்றமையால் யாழ் தேசம் பாழ் தேசமாவது தவிர்க்க முடியாததே.

இவ்விடயத்தை ஒட்டி, பிந்திய கடைசி நேரத் தகவல் ஒன்று நேற்றிரவு கிடைத்தது.

இப்படி உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களை புறம் ஒதுக்கி, நிதி ஒதுக்கீட்டுக் கூட்டங்களைக் கூட்டுவது சட்ட விரோதம், ஆகையால் அப்படி அவர்களுக்கு அழைப்பு இல்லாமல் கூட்டங்களைக் கூட்ட வேண்டாம் என்ற கடுமையான உத்தரவு கொழும்பில் நிதி அமைச்சின் உயர் வட்டாரங்களில் இருந்து நேற்று மாலை வடக்கில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கிடைத்திருக்கின்றது.

நேற்றைய கூட்டங்கள் முடிந்து விட்டன. இன்றைய கூட்டங்களின் விடயத்தில் அதிகாரிகள் என்ன செய்யப்போகின்றார்கள்.

அதற்கும் அமுல்பேபியின் தலையசைப்புக்காகத் தொங்கிக் கொண்டிருப்பார்கள் என நினைக்கிறேன் – ஏனென்றால் இந்த அதிகாரிகளும் தற்றுணிவு இல்லாத, வாலாட்டும் ரகத்தைச் சேர்ந்தவர்கள் தானே....!

– மின்னல் –

- - - - - - - - - - - - - - - - -

## 24 மணி நேரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களும் படகுகளுடன் மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வள துறை அதிகாரிகள் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் யாழ். கடலில் 43 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன. அத்துடன் மன்னார் கடற்பகுதியில் 12 மீனவர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இதற்கமைய வடக்கு கடலில் கடந்த 24 மணிநேரத்தில் 69 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவர்களை உடனடியாக மீட்டுத் தரக் கோரியும் தமிழகத்தில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

- - - - - - - - - - - - - - - - -

## ரஞ்சனை உடனே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்று ரஞ்சனைச் சந்தித்து சுகநலம் விசாரித்த பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மனோ கணேசன் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்திப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவருடன் நானும் இங்கு வந்தேன். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியதுபோல் ரஞ்சன் ராமநாயக்க சிறையில் இருக்க வேண்டிய நபர் அல்லர்.

எனவே, மனித நேயத்தின் அடிப்படையில் அவருக்கு முழுமையான பொது மன் னிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கொலை செய்துவிட்டோ, கொள்ளை அடித்துவிட்டோ, குற்றங்கள் புரிந்துவிட்டோ அவர் சிறைக்குச் செல்லவில்லை.

மக்களின் உரிமைகளுக்காகத் துணிந்து கதைக்கக் கூடியவர் அவர். அவ்வாறு கதைக்கும்போது சொற் பிரயோகங்களில் பிழை ஏற்படலாம். அவ்வாறானதொரு விடயத்துக்காகவே சிறைத்தண்டனையை அவர் அனுபவிக்கின்றார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மன்னிப்பு வழங்குமாறு நீதிமன்றத் தரப்பில் உள்ளவர்களிடமும் இரு கரம் கூப்பி கேட்டுக் கொள்கின்றேன்.

வழக்கின் பிரதான தரப்பு அவர்கள் தான். எனவே, அவர்கள் மன்னிப்பு வழங்கினால், ஜனாதிபதியால் அதற்குச் செயல் வடிவம் கொடுக்க முடியும் – என்றார்.

## யாழில் திடீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அருள்டயஸ் கிவின்சலா என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை குழந்தைக்குத் திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், உடனடியாக புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் குழந்தை சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

எனினும், சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு குழந்தை உயிரிழந்துவிட்டது என மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

குழந்தையின் மாதிரிகள் பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை என்று அறிக்கையிடப்பட்டது.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# 19 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 771 ஆக அதிகரித்துள்ளது.

- - - - - - - - - - - - - - - - -






## பருத்தித்துறை நகரசபை
## பொது அறிவித்தல் - 2022

| இல. | விடயம் | அறிவித்தல்கள் |
|---|---|---|
| 1 | ஆதனவரி | 2022ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான ஆதனவரியானது தற்போது நடைமுறையில் இருக்கும் ஆண்டு பெறுமதியின் 10% சதவீத அடிப்படையில் அறவிடப்படும். இவ்வாதன வரித்தொகைகள் 2022 மார்ச்31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் காலாண்டுகளுக்கு ஒரு தடவை செலுத்தப்படல் வேண்டும். 2022 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் நான்கு கந்தாயங்களுக்குரிய ஆதனவரியை ஒரே தடவையாகவே செலுத்தினால் 10% வரிக்கழிவும், ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தினால் 5% வரிக்கழிவும் வழங்கப்படும். குறித்த காலாண்டிற்குள் வரி செலுத்தாது விட்டால் அதற்காக முறையே தரிசுநிலம், வதிவிடங்களுக்கு 15%மும், வியாபார நிலையங்களுக்கு 20% மும் பற்றாணைச்செலவாக (தண்டம்) ஆதனவரியுடன் சேர்த்து அறிவிடப்படும். |
| 2 | ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்தல் | ஆதனம் உடமை மாற்றம் செய்யப்பட்டிருந்தும், சபையின் ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யாதவர்கள் ஆவணங்களை நகரசபை அலுவலகத்தில் சமர்ப்பித்து பெயர்மாற்றத்தினை மேற்கொள்ள வேண்டும். |
| 3 | காணி உபபிரிவிடுகை | ஆதனம் ஒன்று துண்டுகளாக பிரிக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும் |
| 4 | 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்தின் கீழாக கட்டட அனுமதி வழங்கல் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதாயினும் நகரசபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்பே அமைக்கப்பட வேண்டும்.<br>2. புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணத்தை செலுத்தி கட்டட அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்க வேண்டும்.<br>3.அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்பே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். |
| 5 | சூழல் பாதுகாப்பு உரிமம் | 2000 ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் / வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல்பாதுகாப்பு உரிமத்தினை 2022.03.31 ஆந் திகதிக்கு இற்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத்தவறுபவர்கள் 2022 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார / தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 6 | வியாபார அனுமதிப்பத்திரம் / வியாபாரவரி | வியாபார, கைத்தொழில் நிலையங்களுக்கான உரிமத்தினை / வியாபார வரியினை 2022.03.31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து உரிய கட்டணத்தை செலுத்தி உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 7 | துவிச்சக்கரவண்டி உரிமம், வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் | 2022.01.31 ஆந் திகதிக்கு முன் கட்டணத்தினை செலுத்தி உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 8 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | நகரசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி அனுமதியைப் பெற்றே காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். |
| 9 | தெருவோர வியாபாரம் | வியாபார நிலையங்களுக்கு முன்னால் பாதசாரிகள் போக்குவரத்துக்கு இடையூறாக பொருட்கள் காட்சிப்படுத்தல் விற்பனை செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. சபையின் பொதுச் சந்தை, இறைச்சிக் கடைகளில் இருந்து 500m சுற்றாடலில் மரக்கறிகள், கடல் உணவுகள், இறைச்சிகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 10 | கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த்ல் | சபை எல்லைக்குள் கட்டாக்காலியாக நாய்கள், ஆடு, மாடுகளை அலைந்து திரிய அனுமதிக்கும் பொதுமக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 11 | பொது சுகாதாரத்தைப் பேணுதல் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவுசெய்யப்படுவதுடன் உணவு கையாளும் நிலையபணியாளர்கள் மருத்துவப் பரிசோதனையினை மேற்கொண்டு அனுமதி அட்டையினை பெற்றிருத்தல் வேண்டும். |
| 12 | பொது இடங்களில் கழிவு போடுதலும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கழிவுப்பொருட்களை தரம்பிரித்து ஒழுங்குபடுத்தல் வேண்டும். உணவகங்கள், விடுதிகளில் இருந்து கழிவு அகற்றுவதற்கான கட்டணம் அறவிடப்பட்டே சேவை வழங்கப்படும். |
| 13 | படவரைஞர்களை பதிவு செய்தல். | நகரசபையில் பதிவு செய்யப்பட்ட படவரைஞர்கள் தமது பதிவினை 2022.03.31 ஆந் திகதிக்கு முன்னதாக புதுப்பித்தல் வேண்டும். புதிதாக பதிவு செய்யவிரும்புவோர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பதிவு செய்துகொள்ள முடியும். |
| 14 | வீதி ஒழுங்கைப் பேணுதல் | பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வீதிச் சட்ட ஒழுங்கைப் பேணுமாறும் வீதியோரங்களில் பூமரங்களை நாட்டி அழகுபடுத்தல் மற்றும் வீதி பராமரிப்பு எல்லைக்குள் நிரந்தர கட்டுமான வேலைகள் போன்றவற்றை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் வீதியோரத்தில் உள்ள வியாபார நிறுவனங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், வீதியோரத்தில் கட்டடப் பொருட்களைப் போட்டு இடையூறு செய்தல், நகரசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன். |

மேற்கூறிய விடயங்கள் தொர்பில் பொதுமக்கள் மற்றும் தொடர்புபட்டோரின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத்தவறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திகதி**
**21/12/.2021**

**யோ.இருதயராசா**
**தவிசாளர்**
**பருத்தித்துறை நகரசபை**

# தமிழருக்கு அரசியல் தீர்வு கிட்டும்வரை ஓயமாட்டேன்
## சம்பந்தன் அறிவிப்பு

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கப் பெறும் வரை நான் ஓய்வுபெறப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரா. சம்பந்தன் எம்.பி. துறக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு அறிவிப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

நான் வசதிகளை அனுபவிப்பதற்காக அரசியலுக்கு வந்தவன் அல்லன். தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு முடிவு காணக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காகவே அரசியலுக்கு வந்தவன் நான். எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதைப் பெறாமல் அரசியலில் இருந்து நான் விடைபெறப் போவதில்லை.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் நீண்டநாள் களாக முன்வைத்தபோதும், அந்த கோரிக்கை கவனத்தில் கொள்ளப் படாது இழுத்தடிக்கப்பட்டு காலம் கடத்து கின்ற போக்கு காணப்படுகின்ற நிலையில் தமிழ் மக்களின் எதிர்கால சுபீட்சமும் அமைதியும் சுயநிர்ணயமும் உள்ளடக்கிய தீர்வைப்பெறும் வரை அரசியலில் இருந்து ஓய்வுபெறும் எண்ணம் எனக்கு எப்போதும் இருந்ததில்லை.

தந்தை செல்வா என்னை அரசிய லுக்கு வரும்படி அழைத்த போது நான் மூன்றுமுறை மறுத்தவன் பின்பே அரசியலுக்குள் வந்தேன். நான் அரசியலுக்கு வந்ததன் காரணம் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு, நிரந்தரமான, நிச்சயமான தீர்வைப் பெறவேண்டும் என்பதற்காகவேயாகும். அதற்காக கடந்த 50 வருடங்களாக நான் போராடி வந்திருக்கின்றேன்.

என்னுடைய வருகை வெறும் அரசியல் மயப்பட்டதாக, அனு கூலங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அமைந்த ஒரு பயணம் அல்ல - என்றார்.

# கைதான மீனவர்களில் ஒருவர் மன்னார் வைத்தியசாலையில்

(ந.லோகதயாளன்)

மன்னார் கடற்பரப்பில் கைதான 12 இந்திய மீனவர்களில் ஒருவர் உயர் குருதி அழுத்த பாதிப்புக் காரணமாக மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மன்னார் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் 7 மணியளவில் கரைக்கு அழைத்துவரப்பட்டனர். இரவாகிய நிலையில் தாழ்வுப்பாடு கடற்படை முகாமில் அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு தங்கவைக்கப்பட்டிருந்த வேளை உயர் குருதி அழுத்தம் காரணமாக மீனவர் ஒருவர் பாதிக்கப்பட்டார். இதன் காரணமாக நேற்று அதிகாலை 12 மணியளவில் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 53 வயதுடைய மைக்கல் என் பவரே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் குருதி அழுத்த நோயாளி எனவும், தற்போது ஆபத்தின்றி சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# இன்றைய கூட்டத்துக்கு ரிஷாத்துக்கும் அழைப்பு

(ந.லோகதயாளன்)

கொழும்பு, டிசெம்பர் 21

தமிழ்ப்பேசும் தரப்புகளின் ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டி லான பொது ஆவணம் ஒன்றைத் தயாரித்து இந்தியப் பிரதமருக்கு அனுப்பும் நோக்கில் ரெலோ அமைப்பினால் இன்று கொழும்பில் நடத்தப்பட விருக்கும் கூட்டத்துக்கு இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி கொழும்பிலும் அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலும் இது தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டங்களில் முஸ்லிம்கள் தரப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. மட்டுமே அழைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது ஆவணத்தை இறுதி செய்து ஒப்பமிட விருக்கும் நிலையில் கடைசி சந்தர்ப்பத்தில் ரிஷாத்தும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காத்திருக்கும் பாதிப்பு!

நாட்டின் மிக மோசமான பொருளாதார நிலைமை பல பாதிப்பான பின் விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

ஒரு நலிவுற்ற சமூகம் உருவாவதற்கான களச் சூழமைவு ஏற்பட்டிருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்பாராத வகையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் எகிறியுள்ளன. ஆனால் அதற்கேற்றாப்போல் தனி நபர் வருமானம் உயரவில்லை. அதனால் சாமானியன் – பாமரன்– தன் வாழ்வியலுக்கான அடிப்படைத் தேவைகளைக் கூடப் பெற முடியாத – நிறைவு செய்ய இயலாத – கட்டுக்கடங்கா நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

செலவினம் எகிறியுள்ளது. ஆனால் வருமானம் உயரவில்லை. குறிப்பாக அரச ஊழியர்கள், ஒய்வூதியர்கள், அன்றாடங் காய்ச்சிகளின் நிலைமை மோசம்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசின் மிக மோசமான பொருளாதார முகாமைத்துவத்தின் கீழ் நாட்டின் விளிம்பு நிலைக் குடும்பங்கள் யாவும் அரைப்பட்டினி கிடக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மரக்கறி வகைகள், முட்டை, மீன், இறைச்சி போன்றவற்றின் விலைகள் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாத வீதத்தில் மோசமாக அதிகரித்துள்ளன. இதனால் நுகர்வோரின் கொள்வனவு முறைமை சடுதியாகப் பெரும் மாற்றம் கண்டிருப்பதாக வர்த்தகர்கள் – குறிப்பாக மரக்கறி வகைகளின் விற்பனையில் ஈடுபடும் சந்தை வியாபாரிகள் – கூறுகின்றனர்.

ஒருபுறம் மரக்கறி, மீன், இறைச்சி விலை அதிகரிப்பு என்றால் மறுபுறம் காஸ் விலையேற்றம், அதனைப் பயன்படுத்துவது தொடர்பான அச்சம் என்பவை காரணமாக வீடுகளில் சமைக்கும் பழக்கம் குறைந்து வருகின்றது. வெளியில் சமைத்த – விலை குறைந்த – வயிற்றை நிரப்பக்கூடிய – ஏதோ ஒன்றை வாங்கிச் சமாளிப்போம் என்ற அன்றாட நிலைமையில்தான் பெரும்பாலான நடுத்தரவர்க்கக் குடும்பங்கள் கூட உள்ளன.

மக்களின் சந்தைக் கொள்வனவுப் போக்குத் தொடர்பில் சந்தை வியாபாரிகள் கூறும் கருத்துக்கள், தகவல்கள் நோக்கற்பாலவை.

✦ மரக்கறி வகைக் கொள்வனவில் சடுதியான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

✦ விலையுயர்ந்த மரக்கறி வகைகளை மக்கள் வாங்கும் அளவு மிக சொற்பமாக இருக்கின்றது. முன்னர் அரைக் கிலோ, ஒருகிலோ மரக்கறி ரகங்களைக் கொள்வனவு செய்தோர் இப்போது நூறு கிராம் அளவில் கொள்வனவு செய்கின்றனர்.

✦ மிக விலை குறைந்த கீரை வகைகளை – குறிப்பாக முருங்கையிலை போன்றவற்றை – வாங்கிச் சென்று அன்றாடப் பட்டினியையும் சமையலையும் சமாளிப்போம் என்ற எண்ணமே பெரும்பாலான குடும்பத் தலைவர்களின் எண்ணமாக உள்ளது.

✦ வாரத்துக்கு ஓரிரு நாள்கள் மீன், முட்டை, இறைச்சி வகைகளை வாங்கியோர் அவற்றைத் தவிர்க்கின்றனர். அல்லது வழமையாகக் கொள்முதல் செய்யும் அளவில் அரைவாசி, கால்பங்கு வாங்கும் முறைமைக்கு மாறியுள்ளனர்.

✦ ஒரு சமயத்தில் இரண்டு, மூன்று மரக்கறியுடன் மதிய உணவை உண்ட பல குடும்பங்கள் ஒரு மரக்கறி, ஒரு பருப்பு, ஒரு ரசத்துடன் மதிய போசனத்தை முடித்துக் கொள்ளும் இக்கட்டு.

– இந்தச் சந்தைக் கொள்வனவு முறையை போஷாக்குக் குறைந்த ஒரு சமூகம் உருக்கொள்வதற்கான அடித்தளம் என்று நிபுணர்கள் எச்சரிக்கைக் குரல் எழுப்புகின்றனர்.

வெளிநாட்டிலிருக்கும் தரப்புகள் மூலம் மாதாந்த உதவி பெறும் குடும்பங்களைத் தவிர்ந்த ஏனைய குடும்பங்கள் மோசமான எதிர்காலத்தை சந்திக்கும் ஆபத்தில் உள்ளன.

போக்கில்லாத சமூகம், மருத்துவ சுகாதார நெருக்கடிகளையும் இலகுவில் எதிர்கொள்ளும் ஆபத்துக்கு முகம் கொடுக்கத் தள்ளப்படும்.

நாட்டின் மிக மோசமான பொருளாதார நிலைமை சாதாரண பாமரனின் வாழ்வியலில் பல தொடர் நெருக்கடிகளை – பாதிப்புக்களை – பின்னடைவுகளை – விளைவுகளை – ஏற்படுத்தப் போகின்றது என்பது நிஜம்.

# சீனாவின் உரக் கப்பலுக்கு நட்டஈடு வழங்காவிட்டால் நாட்டுக்கு இழப்பு

## ஜோன்ஸ்டன் இப்படிக் கருத்து



இலங்கையால் நிராகரிக்கப்பட்ட சீன உரக் கப்பலுக்கு நட்டஈடு வழங்கப்படாவிட்டால் அது நாட்டுக்கு பாரிய இழப்பாகும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (திங்கட்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், உர விவகாரத்தில் 65 லட்சம் டொலர்களுக்காக சீனாவைப் பகைத்துக்கொள்ள முடியாது எனக் கூறினார்.

இது இரண்டு அரசாங்கங்களுக்கு இடையிலான செயற்பாடு என்பதால் ஒரு தலைப்பட்சமான முடிவுகளை எடுக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

எனவேதான் குறித்த சீன நிறுவனத்துக்கான இழப்பீட்டை வழங்க அமைச்சரவை தீர்மானித்தது என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

65 லட்சம் டொலர்களுக்காக சீனாவுடன் முரண்படாமல் அமைதியான முறையில் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும் எனக் கூறினார்.

இதன் மூலம் கிடைக்கும் இலாப நஷ்டத்தை ஏற்க வேண்டும் எனக் குறிப்பிட்ட அமைச்சர், ஏனைய நாடுகளை பகைத்துக் கொண்டு பயணம் செய்ய முடியாது எனக் குறிப்பிட்டார்.

# விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்கப்பட வேண்டும்

உர நெருக்கடியால் பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கேட்டுக்கொண்டது.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளாலேயே உரத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும் இதுவே மரக்கறி மற்றும் அரிசியின் விலை அதிகரிப்புக்கு காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை இவ்வாறான நெருக்கடி நிலையின் போது அரசாங்கத்தின் உறுப்பினர்கள் எவ்வாறு வெளிநாட்டு சுற்றுப் பயணங்களை மேற்கொள்கின்றனர் என்றும் காவிந்த ஜயவர்தன கேள்வியெழுப்பினார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை ஏன் தற்போதைய அரசாங்கத்தால் புரிந்துகொள்ள முடியவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

# நாட்டை தலைமையேற்று வழிநடத்த தயார் என்கிறது தேசிய மக்கள் சக்தி

இலங்கையின் பொருளாதாரம் அழிவுகரமான சூழலை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், நாட்டில் பொருள்களின் விலை அதிகரித்துள்ளதுடன் அதற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான நிலையில் அத்தியாவசிய பொருள்களுடன் 1,500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளன எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, கடனை அடைக்க இலங்கையால் முடியுமா என்பதே அனைவருடைய கேள்வியாக உள்ளது எனக் கூறினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு சரியான பொருளாதாரக் கொள்கையை உருவாக்குவதே ஒரே வழி என அவர் குறிப்பிட்டார்.

மக்களின் முன்னேற்றத்துக்காக நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவும் நேர்மையான அரசியலுடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லவும் தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

# கலைஞர் ஒன்றுகூடல் மன்னாரில் நடந்தது

(மன்னார் நிருபர்)

பிரதேச ரீதியில் உள்ள கலைஞர்களை ஒன்றிணைக்கும் முகமாக கலாசார அலுவல்கள் திணைக்களமும், மன்னார் பிரதேச செயலகமும் இணைந்து மன்னார் பிரதேச கலாசார பேரவையின் ஏற்பாட்டில் ஒழுங்கமைத்த கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வும் பிரதேச மட்ட கலை இலக்கிய போட்டி பரிசளிப்பு விழா நிகழ்வும் மன்னார் நகர் பிரதேச செயலாளர் ம.பிரதீப் தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை மன்னார் கலையருவி மண்டபத்தில் இடம்பெற்றது.

கொரோனாப் பரவல் காரணமாக நீண்ட காலமாக செயற்பாடுகள் இன்றிக் காணப்படும் கலாமன்றங்களை ஒன்றிணைத்து அதன் அங்கத்தவர்கள் மற்றும் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வில் மன்னார் கலையருவி இயக்குநர் அருட்தந்தை செல்வநாதன் பீரிஸ், மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவை தலைவர் தர்மகுமார குருக்கள், மூர்வீதி ஜூம்மா பள்ளிவாசல் மௌலவி ஜனாப் அஸீம் உட்பட மன்னார் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், கலாசார உத்தியோகத்தர்கள், மூத்த கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கலாமன்றங்களை





சேர்ந்த கலைஞர்களால் கலை நிகழ்வுகள் நடத்தப்பட்டமையுடன் வாழ்வில் மகிழ்ச்சி நிறைந்திருப்பது திருமணத்துக்கு முன்னரா? இல்லை பின்னரா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம் பெற்றது.

அத்துடன் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் மன்னார் அமுதனால் எழுதப்பட்ட ‘ஒற்றை யானை’ நூல் வெளியீடு செய்யப்பட்டது.

மேலும் பேசாலை பகுதியைச் சேர்ந்த இளைஞர்களால் போதைப் பொருளுக்கு எதிராக உருவாக்கப்பட்ட ‘உன் செயல் அறிவான்’ குறுந்திரைப்படமும் திரையிடப்பட்டது.

அதேநேரம் இந்த வருடம் நடைபெற்ற கலை இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற கலைஞர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் பகுதிகளில் சீனா கால்பதிப்பு இந்தியாவுக்கு நேரடி அச்சுறுத்தல்!

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எச்சரிக்கை



தமிழர் தாயகத்தில் சீனா மேற்கொள்ளும் திட்டங்களில் இருந்து முழுமையாகவிலகிக்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், எந்த திட்டங்களானாலும் தாயக மக்களிடமிருந்து வெளிப்படையான இசைவு பெற்ற பின்னரே ஆரம்பிக்கவேண்டும்எனவலியுறுத்தியுள்ளது.

இந்தியப் பெருங்கடலில் சீன வட்டத்தை விரிவாக்கும் ஆட்டத்துக்காகத் தமிழர்தாயகப்பகுதிகளைபலியிடவிடாது, தமிழர் தேசமும் தமிழர் அரசியல் தலைமைகளும் தமது அரசியல் இறையாண்மையை செலுத்த வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு –

இலங்கைத் தீவின் தமிழர் தாயகப் பகுதியின் வட புலத்தே, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இயற்றும் மின்சக்தி திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ள சீனா, இந்த முடிவுக்கு 'மூன்றாம் தரப்பின் பாதுகாப்பு' காரணமெனக் கூறியுள்ளது.

சீனாவின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது. எனினும் தமிழர் தாயகத்தில் சீனா மேற்கொள்ளும் திட்டங்களில் இருந்து முழுமையாக விலகிக்கொள்ள வேண்டும்.

போருக்குப்பின்னராகஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் எதுவானாலும் அம்முயற்சிக்கு தாயக மக்களிடமிருந்து வெளிப்படையான இசைவு பெற்ற பின்னரே ஆரம்பிக்க வேண்டும். இசைவு என்பது திட்டங்களின் அரசியல், பொருளியல் கூறுகளுக்கு மட் டுமன்று, நம்பகமான பன்னாட்டு அமைப்பொன்றின் சூழலியல் மதிப்பாய்வின் ஊடாகச் சூழலியல் கூறுகளுக்கும் இசைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

சீன நிறுவனங்களுக்கு திட்டங்கள் வழங்குவதன் மூலம் இந்தியாவைச் சுற்றிவளைக்கவும் அடக்கி வைக்கவும் சீனாவுக்கு உதவும் இலங்கையின் நகர்வுகள் தமிழர் இறையாண்மை மீது நெடுந்தாக்கத்தை ஏற்படுத்தும். வட புலத்தே யாழ். குடா நாட்டையும் இந்தியாவின் தமிழ்நாட்டையும் பிரிக்கும் குறுகலான பாக்கு நீரிணையில் அமைந்த சிறு தீவுகளான நெடுந்தீவு, அனலைத் தீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு சைனோ சர் ஹைப்ரிட் டெக்னாலஜி என்ற சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான சீனத் தூதரகம் 'மூன்றாம் தரப்பு' எதுவென்று கூறாவிட்டாலும் அது இந்தியாதான் என்று நம்பப்படுகிறது.

அந்தச் சிறு தீவுகளில் இந்திய நிறுவனமான அதானி குழுவுக்கு 1.2 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள திட்டப் பணியை வழங்கும் ஒப்பந்தத்தை கடந்த பெப்ரவரியில் கொழும்பு நீக்கம் செய்து, அதனை சீன நிறுவனத்துக்கு வழங்கிய போது இந்தியா தனது பாதுகாப்பு சார்ந்த கவலைகளைத் தெரிவித்தது.

இந்திய நிறுவனத்தின் முயற்சியை சீனம் கீழறுத்த செயல் அந்த நேரத்தில் இலங்கையில் தன் நலன்களைக் காத்துக்கொள்வதோடு அண்டை நாடுகளோடு இந்தியாவுக்குள்ள உறவுகளைக் கெடுக்கவும் கிழக்காசிய நாடாகிய சீனத்துக்குள்ள வல்லமையாகக் கருதப்பட்டது.

இலங்கையின் வட கடலோரத்தில் யாழ். குடாநாடும் அதன் கடற்பகுதியில் அமைந்த சிறு தீவுகளும் தொன்று தொட்டுத் தமிழர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்துள்ளன.

ஆகவே, அவை தமிழர் தாயகத்தின் பிரிக்க முடியாத பகுதிகளாகும். மேலும் இலங்கைத் தீவின் தமிழர் தாயகம் பகுதியும் அதையொட்டிய கடற்பிராந்தியம் தமிழர் இறைமைக்கு உட்பட்டவை. இதனை உறுதி செய்திடத் தமிழர் தேசமும் தமிழர் அரசியல் தலைமைகளும் தமது அரசியல் இறையாண்மையை செலுத்த வேண்டும். – என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# அரச வைத்திய அதிகாரிகள் சங்க போராட்டத்தினால் மக்கள் பாதிப்பு

நாட்டின் 5 மாவட்டங்களில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று (திங்கட்கிழமை) காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் சுகாதார அமைச்சால் 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், மலையகத்தில் உள்ள சில வைத்தியசாலைகளில் நேற்று சில வைத்தியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தாலும் சில வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதனால் அங்கு சிகிச்சைக்காக வருகை தந்த பொதுமக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வீடு திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக தூர பிரதேசங்களிலிருந்து வருகை தந்த தோட்டத் தொழிலாளர்கள்பாரியபிரச்சினைக்கு முகங்கொடுத்தனர்.

மேலும் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் முழுமையாக செயலிழந்தமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

நுவரெலியா, ஹற்றன் டிக்கோயா, பொகவந்தலாவ, மஸ்கெலியா, கொட்டகலை, லிந்துலை, டயகம, அக்கரப்பத்தனை, உடபுஸ்ஸலாவ போன்ற வைத்தியசாலையிலும் இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீள மூடப்படும் நிலை?

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் மூடப்படும் அபாயம் காணப்படுவதாக தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஆனந்த பாலித, எரிசக்தி அமைச்சரின் கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன எனத் தெரிவித்தார்.

எரிபொருளை கொள்வனவு செய்ய அரசாங்கம் கடன்களைப் பெற்றுக் கொள்ளத் தவறியமை காரணமாக எதிர் காலத்தில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புநிலையம்மூடப்படும்எனக்கூறினார்.

ஒரு வருட காலத்துக்கு எண்ணெய் கொள்வனவு செய்வதற்கு ஓமானிடம் இருந்து 360 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுகிறோம் என எரிசக்தி அமைச்சர் கூறியிருந்தாலும் அதனை அரசாங்கம் பெற்றுக்கொள்ளப்போவதில்லை என ஆனந்த பாலித குறிப்பிட்டார்.

மேலும் எரிபொருள் கொள்வனவிற்காக இந்தியாவிடமிருந்து 50 கோடி டொலர்களைப் பெறவுள்ளதாக அமைச்சர் கூறியிருந்தாலும் நிதியமைச்சர் இந்தியாவிடமிருந்து எரிபொருளை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார் என கூறினார்.

எனவே 50 கோடி அமெரிக்க டொலர் கடனை நாடு பெறாவிட்டால் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை மூட வேண்டி ஏற்படும் என ஆனந்த பாலித தெரிவித்தார்.



# 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் அரச மருத்துவ அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் 5 மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் நேற்று (திங்கட்கிழமை) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் எனத் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, நுவரெலியா, மன்னார், திருகோணமலை, இரத்தினபுரி மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் நேற்று பணிப்புறக்கணிப்பு நடைபெற்றதாக அந்த சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் சுகாதார அமைச்சால் 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 227

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**589. பிரதமர் மோடிக்கு அனுப்பப்பட்ட கடிதத்துடன் இணைக்கப்பட்ட ஆவணத்தின் விவரங்களென்ன?**

அதன் சாரம் –

“இந்தியா 29 ஜுலை 1987 இல் ஸ்ரீலங்காவுடன் ஏற்படுத்திக் கொண்ட இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம் பற்றி நீங்கள் அறிவீர்கள். அந்த ஒப்பந்தம் தொடர்ந்து வந்த இனப்பிரச்சினைக்கு மாகாண சபைகளின் அடிப்படையில் அதிகாரங்களை பகிர்வது என்ற முறையை ஏற்படுத்தியது. தமிழ் மக்கள் 1983 வரை அனுபவித்த அட்டூழியங்களில் இந்தியா காட்டிய கரிசனைகளாலேயே அந்த ஒப்பந்தம் சாத்தியமானது. ஒப்பந்தம்,வடக்குக் கிழக்கு பிரதேசங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என ஏற்றுக் கொண்டதுடன் அந்த பிரதேசங்களை அப்படியான முறையில் ஆட்சிப் படுத்துவதற்காக ஒன்றாக இணைப்பதென்றும் ஒத்துக் கொள்ளப்பட்டது. அரசமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தம் அந்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றை நிறைவேற்றுவதற்காக இருந்தாலும், அது ஒப்பந்தத்தின் நோக்கங்களை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை என எல்லாத் தரப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் நவம்பர் 1987 இல் இருந்து பின்வந்த எத்தனையோ ஸ்ரீலங்கா அரசுகள் – ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிலிருந்து மிக அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரை – ஸ்ரீலங்காவில் ஓர் அர்த்தம் நிறைந்த அதிகாரப்பகிர்வு அமைக்கப்படும் என உறுதியளித்தனர்.

தமிழர்கள் சார்பில் தமிழர் தகவல் நடுவப் பணியகத்தினால் பிரதமர் மோடிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை கீழ் வரும் இணைப்பின் மூலம் பார்வையிட முடியும்.
https://www.ticonline.org/docs/Appeal_to_the_PM_of_India_October_2021.pdf

அவற்றில் இருந்து கிரகித்துக் கொள்ள கூடியது, முதலாவது – 13 ஆம் சட்டத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி, பின் அதன்மேல் அதிகாரப்பரவலை ஆணித்தரமாக்கும் கட்டமைப்புகளையும் ஏற்படுத்துவது என்பதே.




அதன் பின்னணியில் 13 மார்ச் 2015, ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் நீங்கள் கூட்டுசமஷ்டி முறையில் அதிக நம்பிக்கை வாய்ந்தவர் என முக்கியமான பேச்சினை ஆற்றினீர்கள்.

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துக்கு அன்று நீங்கள், “இன்று எனது முக்கிய பணி, இந்தியாவில் மாநிலங்களை (states) பலமாக்குவதே, கூட்டுறவான சமஷ்டியில் நான் அதிகம் நம்பிக்கை கொண்டவன். ஆகவே மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்களையும் வளங்களையும் தருகிறோம். அதனால் அவர்களை நாங்கள் எங்கள் நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களில் பங்குதாரர்களாக ஆக்குகிறோம்” என கூறினீர்கள்.

ஒப்பந்தத்தின் 34வருடங்களின் பின்னும், போர் முடிந்த 11வருடங்களின் பின்னும், ஸ்ரீலங்கா அரசு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைக்கு மாறாகவே தனது திட்டங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டுவருகிறது. குடியரசு யாப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்ட பின்னும் தரப்பட்ட உறுதிமொழிகளுக்கு மாறாகவும் ஸ்ரீலங்கா ஒற்றையாட்சியின் அடிப்படையில் பகிரப்பட்ட அதிகாரங்களை கூட மத்திய அரசு மீள் வாங்குகிறது. அப்படியான பல சட்டங்களை உதாரணமாக காட்டலாம். முக்கியம் எது எனில் 13 ஆம் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. அந்த நிலைவரம் இன்னும் தொடர்கிறது.

அவற்றை இன்னும் இழிவான மோசமான நிலைக்கு இட்டுச்செல்வது எல்லா அரசாங்கங்களாலும் – இன்றையது உட்பட – மேற்கொள்ளப்படும் வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே உள்ள மொழிவாரி தொடர்புகளை துண்டிக்க காரியங்கள் ஆற்றுவதே. ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், தொடர்ந்து வந்த 13 ஆவது திருத்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால இணைப்பு செப்ரெம்பர் 2006 இல் ஸ்ரீலங்காவின் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. இதன் பாதிப்பால் இன்று வரை வடக்கு கிழக்கில் அரசமைப்பின் பெறுபேறு, அதன் அதிகாரங்கள் என்பன கேள்விக்குறிகளாகவே உள்ளன.

அதற்கிடையில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களது நிலங்கள் முறையற்ற விதங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி என்றும் மற்றப் போர்வைகளின் ஊடாகவும் அபகரிக்கப்படுகின்றன. இவை தொடரப்படுமானால் ஒப்பந்தத்தின் அடிப்படையே நிராகரிக்கப்பட்டு விடும். அதுதான் ஸ்ரீலங்கா அரசின் பிரதானமான நோக்கமாகவும் தெரிகிறது.

இவற்றின் பின்னணிகளில்தான் நாங்கள் உங்களை உடனடியாக நீங்கள் இதில் ஈடுபட்டு ஒப்பந்தத்தின் சரத்துகள் முழுமையாக நடைமுறைப்படுத்த வழிகள் செய்ய வேண்டும் எனக் கோருகிறோம்.” – என்பதே.

தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் இந்தக் கோரிக்கைகளை இந்திய அரசுக்கு முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாத தரப்பு இருக்க முடியுமா என்பது கேள்விக் குறியே. ஆனால் அதுதான் அவர்களது அரசியல். தேர்தலுக்காக 13 ஆம் சரத்தின்மேலும்கீழும்என்றும்கண்ணாமூச்சி காட்டுகிறார்கள். ஒப்பந்தத்தின் நோக்கங்களை அமுல்படுத்த வேண்டிய கோரிக்கை பிரதானமாக வேண்டும்.

**590. ஒரு குரலில் இவற்றை தமிழ் தரப்புக்கள் முன்வைக்க முடியாதா?**

“தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் கோரிக்கைகளை தமிழ் பேசும் தரப்புகள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதை ஒரே குரலில் கேட்க வேண்டும் என்பது நல்ல விடயம் தான். பெரும்பாலும் நாங்கள் ஒரே குரலிலேயே நமது நிலைப்பாட்டை இதுவரை கூறி வந்துள்ளோம். தமிழ் தேசியம் பேசும் எந்தக் கட்சியும் இதுவரையில் தங்களது கடந்த 12வருட காலத்தில் தேர்தல் விஞ்ஞாபனம் எதிலும் அதனை வலியுறுத்தவில்லை. சமஷ்டியையே கோரினோம் சமஷ்டி தான் எமது நிலைப்பாடு அதைத்தான் நாம் கோர வேண்டும்” – என சுமந்திரன், சிவகரனின் நெறியாள்கையில் ‘தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின்’ ஏற்பாட்டில் கருத்தாக்க கூட்டத்தில் பேசினார்.

அதில் மேலும் இந்தியக் கடற்பரப்பில் ஏற்பட்டு வரும் அதிகாரப் போட்டியில் முன்னர் கருத்து வேறுபாடுகளில் இருந்த அமெரிக்காவும் இந்தியாவும் இன்று ஒரு நோக்கில் உள்ளன. அதில் தமிழர் தாயகப் பகுதிகளும் இணைந்துள்ளன. அவற்றின் உரிமைகளும் அதிகாரமும் தமிழ் மக்களிடம் கையளிக்கப்பட்டால் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் நேச சக்தியாக தமிழர் இருப்பர், எதிராக இயங்க மாட்டார்கள் எனவும் அவர் கருத்துரைத்தார்.

13 ஆம் திருத்தம் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை தரவில்லை என மஹிந்த ராஜபக்ஷ கூறியமையையும் அது உக்கி போய்விட்டது என ஜி.எல்.பீரிஸ் சொல்வதையும் ஆதாரத்துக்கு சேர்த்து 13 ஆவது திருத்தத்தைப் பேசுவதில் பிரயோசனமில்லை என்ற கருத்து வலியூட்டப்பட்டது. இவையெல்லாம் வரலாறும் எதிர்பார்ப்புகளும்தான். போருக்குச் சாதகமாக 13க்கு மேல் என பேசிய மஹிந்த ராஜபக்ஷ பின்னர் வெற்றியை பற்றியே சொல்லி, தமிழ் தரப்புக் கோரிக்கைகள் இனி எழுத தேவையில்லை, இனி ஒரே நாடு என்றே நிலைப்பாடு எடுத்து, எப்படி தமிழ் குழுக்களூடாக உள்நுழைந்து இருக்கக் கூடியதை அழிப்பது என்ற வியூகங்களை வகுத்தார்.

மனித உரிமை செயற்பாட்டில் இயங்கும் பாக்கிய சோதி சரவணமுத்து தனது கருத்துரை ஒன்றில் “ஆசிய பகுதியில் நிறுவப்பட்டுள்ள மிக பலமான, விரிந்த, ஆழமான, குடும்ப ஆட்சி ஸ்ரீலங்காவில் உள்ளதுதான். அதனை சிங்கள, பௌத்த பெரும்பான்மை அத்திவாரங்களில் அரச அதிகாரம் இராணுவத்துடன் அமைத்து, அதன் முன்னெடுப்புக்கு “ஒரு நாடு; ஒரு சட்டம்” என ஞானசார தேரரை பவனிவர விட்டுள்ளார்கள். ஆகவே இதன் போக்கை மாற்றுவது என்பது மிகக் கடினம்” என்கிறார்.

ஆக இந்த அரசு 13க்கு மேல் போய் ஏதும் தருமா என்பதும், சமஷ்டி தான் என்றால் எது என்று, அவற்றை வரவிடாமல்,சமஷ்டிக்கு பல அர்த்தங்கள் உண்டு என்று காவி பூசுவதும், சமஷ்டியா,13 ஆவது சரத்தின் இன்னுமொரு பாங்கா என்பதை சுட்டிக் காட்டுகிறது. இந்த 12 வருடகாலத்தில், ஏன் நல்லாட்சி காலத்தில் கூட, ராஜபக்ஷ தரப்பு 13க்கு மேல் தருவதை ஒப்புக்கொண்டிருக்கலாம். அவர்களுக்கு தீர்வில் அக்கறையில்லை. அதிகாரமும் தமது பேரின சிந்தனையை முன்னெடுக்கும் ஒரு நாடு என்ற திட்டமும் தான் முக்கியம். இதனை அந்தக் கருத்தரங்கில் சமூக ஆய்வாளர் இரேனியஸ் செல்வின் பதிந்தார். அதன் விவரத்தை நாளை பார்ப்போம்.

(வளரும்)

# வடக்கு, கிழக்கில் சீன ஆதிக்கத்தை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும்

## இரா.துரைரெட்ணம் தெரிவிப்பு



வடக்கு மற்றும் கிழக்கில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட சீனா முன்னெடுக்கும் செயற்பாடுகளை இலங்கை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும் என பத்மநாபா மன்றத்தின் தலைவரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குத் தமிழர்கள் இந்தியா மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் குழப்புவதற்காகவே சீனாவின் இந்தச் செயற்பாடு அமைவதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

குறிப்பிட்ட காலமாக யாழ். குடா நாட்டிலும் வடக்கு கிழக்கிலும் முன்னெடுக்கப்படும் இராஜதந்திர செயற்பாடுகளின் அடிப்படையில் வடக்கை சீனாவுக்கு தாரை வார்த்துவிட்டது போன்று உள்ளது. வடக்கில் சீனாவின் மேலாதிக்கம் தொடர்ந்து வருகின்றது.

இலங்கை அரசாங்கம் பொருளாதார ரீதியாக வலுவடைவதற்காக யாழ். குடாவில் இந்தியாவுக்கு ஆபத்தாக வரக்கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்கின்ற சந்தேகம் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளன.

கடந்த வாரம்கூட சீனாவின் தூதுவர்கள் யாழ். குடாவில் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய கேந்திர நிலையத்துக்குச் சென்ற விடயம் என்பது இலங்கை ஊடாக இந்தியாவுக்கு செய்தி ஏதும் வழங்கப்பட்டுள்ளதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் அயல்நாடுகளுக்கு அச்சுறுத்தலையும் பாதுகாப்பு நெருக்கடியையும் ஏற்படுத்தக்கூடிய இராஜதந்திர செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்கின்றதா என்ற சந்தேகம் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

வரலாற்று ரீதியாக வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு ஓர் இறையான்மையுள்ளது. வடக்கு, கிழக்கு பூர்வீகமாக தமிழர்கள் வாழும் பிரதேசம். தனியான கலை, கலாசார விழுமியங்களைக் கொண்ட பகுதி. இந்த கலை, கலாசார விழுமியங்களுடன் இந்தியா அங்குள்ள தமிழ் நாட்டுடன் உள்ள உறவு, தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய செயற்பாடுகள் என பல விடயங்களில் வடக்கு, கிழக்கு தமிழர்கள் இந்தியா மீது கடந்த காலத்தில் கரிசனை காட்டியுள்ளார்கள், எதிர்காலத்தில் காட்டுவார்கள், காட்டக்கூடிய சூழ்நிலையுள்ளது.

இந்த சூழ்நிலையைக் குழப்புவதற்காக சீனாவின் ஆதிக்கத்தைக் கொண்டுவருவதை இலங்கை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யவேண்டும். அதுவே ஆரோக்கியமான செயற்பாடு.

இலங்கை அரசாங்கம் தனது பொருளாதார நலனுக்காக வடக்கு, கிழக்கை சீனாவுக்கு தாரைவார்த்துக் கொடுப்பது என்பதும் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடியவாறும் அயல்நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடியவாறும் இலங்கை அரசாங்கம் செயற்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை மாலியாவத்தை சாவடை திருவருள்மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ சந்திர ஜனார்த்தனசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது.

# இலங்கைக் கடற்பரப்பில் கைதான தமிழக மீனவர்களை விடுதலைசெய்ய உதவுமாறு செந்திலிடம் கோரிக்கை

இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ள 43 இராமேஸ்வர மீனவர்களை விடுதலை செய்ய உதவுமாறு பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளரும், இ.தொ.காவின் உப தலைவருமான செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர் சங்கத்தால் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக செந்தில் தொண்டமானின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த மீனவர்களின் விடுதலை தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் குறித்த மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். கைதுசெய்யப்பட்டுள்ள மீனவர்கள் தற்போது 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளனர்.

இந்நிலையில், 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நிறைவடைந்ததன் பின்னர் மீனவர்களை விடுவிப்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கையை மேற்கொள்கிறேன் செந்தில் தொண்ட மான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த முறை 23 தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்த தருணத்தில் தமிழக மீனவர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று அவர்களை விடுதலை செய்வதற்கான உதவிகளையும் செந்தில் தொண்டமான் முன்னெடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுன்னாகம் குமாரசாமி வீதி ஞாயிறு திறந்துவைக்கப்பட்டது





வலி.தெற்கு பிரதேச சபையின் உறுப்பினராக இருந்து அமரத்துவம் அடைந்த குமாரசுவாமி அவர்களின் நினைவாக சுன்னாகத்தில் வீதி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமரத்துவமடைந்த உறுப்பினரின் நினைவாக வலி.தெற்கு பிரதேச சபையால் புனரமைக்கப்பட்ட வீதிக்கு குமாரசுவாமி வீதி என பெயர் சூட்டப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஞாயிறு மாலை சுன்னாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம பொது அமைப்புகளின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு பொதுமக்கள் பாவனைக்காக குமாரசுவாமி வீதியை திறந்து வைத்ததோடு பெயர் பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

# இரு பிள்ளைகளின் தந்தை சடலமாக யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் மீட்பு

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முடமாவடி சந்தியில் நேற்று (திங்கட்கிழமை) காலை குறித்த சடலம் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கந்தர்மடம், பழம் வீதியில் வசிக்கும் 67 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தையான வைத்தியலிங்கம் செல்வரெத்தினம் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கும் ஜோர்ஜியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு, டிசெ. 21

இலங்கைக்கும் ஜோர்ஜியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் மாதத்துக்குள் இந்த ஒப்பந்தத்தைக் கையெழுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதன் மூலம் அதிகளவிலான ஜோர்ஜிய நாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்க்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நாட்டை முடக்குவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலத்தில் நாட்டை முடக்குவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இருப்பினும் கொரோனாத் தொற்று பரவுவதைத்தடுப்பதற்குத் தேவை யான நடவடிக்கைகளை மக்கள் அவசியம் பின்பற்ற வேண்டும் எனக் கூறினார்.

கொரோனாத் தொற்றின் ஒமிக்ரோன் மாறுபாடு உறுதியான 4 பேர் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர்19)அமரர் கவிஞர் சண்முகம் சிவலிங்கம் (1936 - 2012) அவர்களின் பிறந்தநாள். அதையொட்டி முருகபூபதி வரைந்த நினைவுக் குறிப்பு இது.

## காலமும் கணங்களும்

# கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் இருப்பின் வன்மப் பார்வை

## நனவிடை தோய்தற் குறிப்புகள்



- முருகபூபதி -

எவரும் எதிலிருந்து தப்பினாலும் மரணத்திலிருந்து தப்பமுடியாது. ஆனால், தமக்கு மரணம் எப்படி வரவேண்டும் என்ற விருப்பத்தை சொல்வார்கள். அமைதியான, எவருக்கும் தொல்லை தராத, படுக்கையில் அழுந்தாத, நாள் கணக்கில் படுக்கையில் கிடந்து அவலப்படாமல், நித்திரையிலேயே உயிர் போய்விடவேண்டும் என்று விரும்புபவர்களைத்தான் பார்க்கின்றோம்.

இரவிலோ பகலிலோ உறங்கி, அந்த உறக்கத்திலேயே எந்தச்சலனமும் இன்றி அமைதியாக உயிர்பிரிந்துவிட வேண்டும் எனச்சொல்பவர்களில் இதனை வாசிக்கும் நீங்களும் ஒருவராக இருக்கலாம்.

அவ்வாறு மறைந்து விடுபவர்களை Silent Attack வந்து போய்விட்டார்கள் என்போம்.

ஈழத்தின் மூத்த படைப்பாளியும் பலரதும் ஆசிரியப் பெருந்தகையுமான சண்முகம் சிவலிங்கம் அவர்கள் தமது மரணம் குறித்து தீர்க்கதரிசனத்துடன் வாழ்ந்தவரா…? என்ற எண்ணம் அவரது பின்வரும் கவிதையை படித்ததும் வருகிறது.

**நான் மறைந்துவிடுவேன்**
**நான் இருந்தேன் என்பதற்கு**
**எந்தத்தடயமும் இருக்காது. ஆனால்,**
**எனது இருப்பு**
**காற்றுக்குள் ஊதியிருக்கும்.**
**அதை நீங்கள் காணமாட்டீர்கள்**
**எனது இருப்பின் வன்மம்**
**அவலங்களின் சின்னமாயிருக்கும்.**
**அதை நீங்கள் அறியமாட்டீர்கள்.**
**தொலைக்காட்சியில் வானொலியில்**
**புகைப்படத்தில்**
**அல்லது ஒரு பாராட்டுக்கூட்டத்தில்**
**என்னை மலினப்படுத்த முடியாது.**
**ஒன்றும் இல்லாமைக்குள்**
**எனது ஒரு கண்**
**என்றும் … சிவப்பாய் இருக்கும்.**

சண்முகம் சிவலிங்கம் இந்தக்கவிதைக்கு இருப்பின் வன்மம் என்று தலைப்பிட்டுள்ளார்.

அவரை அவர் பிறந்து வாழ்ந்த கிழக்கிலங்கையில் கல்முனை- பாண்டிருப்பு பிரதேசத்தில் அவருக்குப்பிரியமான சைக்கிளுடனேயே காண்பார்கள். வழக்கமாக இரவில் அருகில் இருக்கும் நண்பர்களை பார்க்கச்செல்வார். வீடு திரும்பி, இரவு உணவுக்குமேல் நெடுநேரம் எழுதுவார். படிப்பார். அதன்பிறகு உறக்கத்துக்குச் செல்வார். அப்படி ஒரு நாள் இரவு உறங்கினார். மறுநாள் அவரது மனைவி திருமதி தங்கராணி சிவலிங்கம் அவரை துயில் எழுப்பச்சென்றார். அவரது உறக்கம் கலையவில்லை. கணவர் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறார் என நினைத்துக்கொண்டு, மனைவி தனது வீட்டுவேலைகளில் மூழ்கினார். மேலும் அரைமணி நேரம் காத்திருந்து விட்டு மீண்டும் கட்டிலருகே சென்று தட்டி எழுப்பினார்.




அவர் எழும்பவே இல்லை. 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியன்று இரவு அவர் உறங்கிய அந்த இரவே, அவரது கடைசி இரவு. அவர் விரும்பியிருந்தவாறே அவர் மறைவு சம்பவித்திருக்கிறது. அது அவருக்கு கிட்டியகொடுப்பினை. சண்முகம் சிவலிங்கம் மறைந்தார் என்ற செய்தியை லண்டன் பி.பி.சி. தமிழோசையில் கேட்டதன் பின்னர் அவரது மனைவியுடன் தொலைபேசியில் உரையாடி எனது கவலையை தெரிவித்து தேறுதல் சொன்னேன்.

கிழக்கிலங்கையின் மூத்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம், 1939 ஆம் ஆண்டில் இன்றைய தினம் டிசெம்பர் 19 ஆம் திகதி பிறந்தவர். 2012 இல் திடீரென மறைந்தார். 1972 முதல் எனக்கும் நண்பராக விளங்கியவர்.

2005இல் சுனாமி கடற்கோள் நிவாரண உதவிகளுடன் அவுஸ்திரேலியாவிலிருந்து கிழக்கிலங்கை சென்ற வேளையில் அவரது பாண்டிருப்பு இல்லத்திலேயே தங்கியிருந்தேன். அவர் தமது சைக்கிளில் எழுத்தாளர்கள் உமா வரதராஜனையும் சடாட்சரனையும் சந்திக்க அழைத்துச் சென்றார்.

அந்த இரவுப்பொழுதில் அவரும் நானும் அவர் வீட்டின் பின்வளவில் வளர்ந்திருந்த தென்னை மரத்தின் கீழே அமர்ந்து நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். மறுநாள் அவரே என்னை பஸ் ஏற்றிவிட்டார். தொடர்ந்தும் அவருடன் தொலைபேசித் தொடர்பில் இருந்தேன்.

அவர் எப்பொழுதும் வித்தியாசமாக சிந்திப்பவர். அவரது பிள்ளைகள் ஆறு ஆண்மக்கள். அதில் ஒருவரை இராணுவம் சுட்டுக்கொன்றது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது அறிந்து வெளியே சென்ற மகனை அவர் தேடிச்சென்றார். அவர் கண்முன்னாலேயே சிலரது சடலங்கள் ட்ரக்கில் செல்வதையும் பார்த்திருக்கிறார். அதில் அவரது மகனும் ஒருவர் என்பது விழுந்த பின்பே அவருக்குத் தெரிய வந்தது.

என்னிடம் மகனின் இழப்பு குறித்து அனுதாபம் தேடும் உணர்வோடு 2005 இல் அவர் பேசவில்லை. மகனின் மரணத்திலிருந்து அவர் அக்கால கட்டத் திற்கேயுரிய பிரத்தியேக சமூகச்செல்வாக்கைத் தேடவுமில்லை. அதிலிருந்து அவர் மலினப்படுத்த முடியாத பிறவி என்பது தெளிவாகின்றது.

சண்முகம் சிவலிங்கத்தின் மறைவையடுத்து, மீண்டும் ஒரு கிழக்கிலங்கை பயணத்தில் பாண்டிருப்புக்குச் சென்றேன். அன்று இரவு நானும் நண்பர் நற்குணசிங்கமும் அவரது வீடு தேடிச்சென்று கேட்டை தட்டும் வரையில் நான் வருவது அவரது மனைவிக்கும் மகனுக்கும் மருமகளுக்கும் தெரியாது.

அவர் மறைந்து ஓராண்டு காலத்தின் பின்னர் வெளியான நினைவுவெளி என்ற மலரை திருமதி சண்முகம் சிவலிங்கம் தந்தார். அதில் அவரது கவிதைகள், கட்டுரை, சிறுகதை வெளியாகியிருக்கின்றன.

மலரை வெளியிட்டவர்கள் அவருடைய பிரியமான சைக்கிளின் படத்தையும் அதில் பதிவு செய்துள்ளனர்.

அதன் நாயகன் இன்றி வழக்கம் போல் அது அந்த வீட்டில் மௌனித்து நிற்கிறது.

அதில் அவரது வன்மம் படிந்திருக்குமா…? என்பது தெரியவில்லை.

கடந்த 2017 ஆம் ஆண்டு மீண்டும்




மட்டக்களப்பு சென்றிருந்த சமயத்தில் பொது நூலக கேட்போர் கூடத்தில் ஒரு இலக்கிய சந்திப்பில் கலந்துகொண்டு விட்டு, புறப்படத்தயாரானபோது ஒரு அன்பர் என்னிடம் வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, தாம் வெளியிடும் விருந்து கலை, இலக்கிய இதழைத் தந்தார்.

எதிர்மன்னசிங்கத்தின் நூல் வெளியீடு அன்றையதினம் அவரது பவளவிழா வையும் முன்னிட்டு நடந்திருந்தமையால் அந்த நிகழ்ச்சியும் கலை, இலக்கிய விருந்தாகவே அமைந்திருந்தது.

அதன் சுவையை ரசித்துவிட்டு கிளம்புகையில் எனது கைக்கு வந்தது கிழக்கிலங்கை பாண்டிருப்பிலிருந்து இருமாதங்களுக்கொருமுறை வெளியாகும் விருந்து.

வெல்லும் தமிழ் - எங்கள் வெல்லத் தமிழ் என்ற கவித்துவ மகுடத்துடன் இதனை வெளியிட்டுவரும் அதன் ஆசிரியர் அகரம். செ.துஜியந்தன் இதழையும் தன்னையும் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

எனக்குத்தரப்பட்டது அதன் மூன்றாவது இதழ். இவ்விதழ் வெளியாகும் ஊரில் பிறந்து வளர்ந்து, இலக்கியப்பணியும் ஆசிரியப்பணியும் புரிந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்களை நினைவு கூரும் வகையில் குறிப்பிட்ட விருந்து வெளியாகியிருந்தது.

எனக்குக் கிடைத்த விருந்து இதழில் கவிஞர் சடாட்சரன், ஜெஸ்மி எம்.மூஸா ஆகியோரும் அவரைப்பற்றி எழுதியிருக்கின்றனர்.

சண்முகம் சிவலிங்கம் அவர்களை 1972 இற்குப்பின்னர் அடிக்கடி கொழும்பில் நண்பர் இலக்கிய விமர்சகர், கவிஞர் பேராசிரியர் எம். ஏ. நுமான் அவர்களின் கொள்ளுப்பிட்டி அறையில் சந்திப்பேன். அக்காலப்பகுதியில், புதுக்கவிதை வீச்சுடன் எழுந்திருந்தது. அதனை ஏற்பதா? நிராகரிப்பதா? என்ற விவாதங்களையும் இலக்கிய இதழ்கள் தொடக்கியிருந்தன. பல புதிய கவிஞர்கள் புற்றீசலாக வெளிக்கிளம்பி, புதுக்கவிதைகளை எழுதிக் குவித்தனர்.

அவர்களுக்கு தமிழ்நாடு வானம்பாடி கவிஞர் குழாமும் உத்வேகம் தந்திருந்தனர். நண்பர் ( அமரர்) கவிஞர் ஈழவாணன் 1975 இல் அக்னி என்ற புதுக்கவிதை சிற்றிதழை நடத்தினார்.

அதன் முதல் இதழ் வெளியீட்டு அரங்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருமதி பாலம் லக்ஷ்மணன் தலைமையில் நடந்தபோது, சண்முகம் சிவலிங்கம், நுமான் ஆகியோருடன் நானும் உரையாற்றியிருக்கின்றேன்.

இலக்கணத்தை தெரிந்துகொண்டு அதனை மீறவேண்டும் என்ற வாதப் பிரதிவாதங்கள் மேலோங்கியிருந்த காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் பின்னரும் எழுதியவர் சண்முகம் சிவலிங்கம்.

எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய ஒருமைப்பாடு மாநாடு 1974 இல் கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்தபோது, இரண்டாம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சியில் கவிஞர் இ. முருகையன் தலைமையில் கவியரங்கும் இடம்பெற்றது.

அதில் கவிதை சமர்ப்பித்த சண்முகம் சிவலிங்கம், தேசிய ஒருமைப்பாடு ஒருவழிப்பாதையல்ல என்ற தொனிப் பொருளில் கருத்துக்களை முன்வைத்திருந்தார். எதிர்காலத்தில் எங்கள் தேசத்தில் நேர்ந்துவிடக்கூடிய அபாயங்களை அவர் அன்றே தீர்க்கதரிசனமாக முன்வைத்தார்.

2005 ஆம் ஆண்டுக்குப்பின்னர் அவரது கண்காணிப்பில் எமது இலங்கை மாணவர் கல்வி நிதியம் ஊடாக சில மாணவர்களுக்கும் உதவியிருக்கின்றோம். அவரது ஒரு மருமகள் திருமதி நிருமிதன் கிழக்கு பல்கலைக்கழகத்தில் நாம் மாணவர்களுக்கு உதவியபோது அவர்களுடைய கண்காணிப்பாளராக பல்கலைக்கழக உதவிப்பதிவாளராக பணியாற்றினார்.

நீர்வளையங்கள் (கவிதை) சிதைந்து போன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும் ( கவிதை ) காண்டாவனம் - (சிறுகதை) முதலான அவரது நூல்கள், அவரது படைப்பாளுமையை பேசிக்கொண்டிருக்கின்றன.

எனது இலக்கிய நண்பர்கள் வட்டத்திலிருந்து சண்முகம் சிவலிங்கம் அவர்களும் 2012 இல் விடைபெற்றார்.

நினைவுகள்தான் எஞ்சியிருக்கின்றன.



# தாதியர் சபை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும் போக்கு மாற்றம்

கடந்த 11 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் 37 ஆயிரம் தாதியரைப் பிரதிநிதித்துவப்படுத்தி 33 நிலையங்களில் இடம்பெற்ற தாதியர் சபைத் தேர்தலை இந்த நாட்டிலுள்ள மக்களின் எதிர்கால வாக்களிக்கும் போக்கை முன்கூட்டியே காட்டும் ஒரு முக்கியமான தேர்தலாக எடுத்துக் கொள்ள முடியும்.

இந்தத் தேர்தல் முடிவுகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு திருப்புமுனையை தென் பகுதி வாக்காளர்கள் மத்தியில் காட்டி நிற்கிறது. அதாவது ஜே.வி.பி. கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அகில இலங்கை தாதியர் சங்கம் முதல் தடவையாக அறுதிப் பெரும்பான்மையாக 66 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது. அதேவேளை அரசாங்கத்தின் கையாளான முத்தெட்டுகம தேரரின் தாதியர் சங்கம் 17 வீத வாக்குகளை மாத்திரமே பெற்று படுதோல்வி அடைந்துள்ளது. மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் விசுவாசியான சமன் ரத்னபிரியவின் சங்கம் 16 வீத வாக்குகளை மாத்திரமே பெற்றுள்ளது.

இந்தத் தேர்தல் முடிவுகள் அதிகரித்த விலைவாசி, வீழ்ந்து வரும் பொருளாதாரம், அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, ஊழல் போன்ற பல்வேறு காரணங்களினால் ஆளும் கட்சி மீது வெறுப்புற்று இருக்கும் மக்களின் மனோநிலையை பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்ள முடியும். அதேவேளை கடந்த காலத்தில் பலமான எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மீது மக்கள் மீண்டும் நம்பிக்கை கொள்ளத் தயாராக இல்லை என்பதை அவர்களுக்கு சார்பான சங்கத்துக்கு அதிகரிக்காத வாக்கு எண்ணிக்கை பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்ள முடியும். கடந்த காலத்தில் ஓர் ஆயுதக் குழுவாகவும், தீண்டத்தகாதவர்களாகவும், தென்பகுதி மக்களால் கருதப்பட்ட ஜே.வி.பி. கட்சிக்கு சடுதியாக அதிகரித்துள்ள வாக்குகள் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க மக்கள் தயாராகி விட்டமையைக் காட்டுகிறது.

இந்த மாற்றம் அரசாங்கத்தின் கையாள்களாகச் செயல்பட்டு வரும் அரச மருத்துவ சங்க வைத்தியர் பாதெனிய குழுவினர் உட்பட்ட ஏனைய அரச சார்பு தொழிற்சங்கங்களுக்கு வயிற்றில் புளியை கரைத்து இருக்கிறது.



**டாக்டர் முரளி வல்லிபுரநாதன்**
(அங்கீகரிக்கப்பட்ட சமுதாய மருத்துவ நிபுணர்,
வருகை நிலை விரிவுரையாளர்,
யாழ்.- கொழும்பு பல்கலைக்கழகங்கள் )

ஆனால் தமிழர்களின் எதிர்கால இருப்பில் இந்த தென்பகுதி வாக்காளரிடம் ஏற்பட்ட மாற்றம் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை முன்கூட்டியே ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

கடந்த காலத்தில் ஜே.வி.பி. கட்சி சிறுபான்மை தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஒரு போதுமே ஆதரிக்கவில்லை. மேலும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் இலங்கை அரசாங்கங்களின் தொடர்ச்சியான முயற்சிகளையும் ஆரம்பத்தில் இருந்து எதிர்த்து வந்திருக்கிறது. இதை 1966 பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிரான ஊர்வலம், 1987 இல் மாகாணசபைக்கு எதிரான போராட்டம், தொண்ணூறுகளில் ரணில் நோர்வே ஊடாக மேற்கொண்ட சமாதானப் பேச்சுக்கு எதிராக மக்களை தூண்டி விட்டமை, 2005 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் சமஷ்டித் தீர்வுக்கு எதிரான அறைகூவலுக்கு ஆதரவளித்தமை, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும்படி உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து 2006 ஆம் ஆண்டில் அவற்றினைப் பிரிக்கும் தீர்ப்பினைப் பெற்றதன் ஊடாக தமிழர்களது வரலாற்றுத் தாயக உரிமைகோரலுக்கு எதிராகச் செயற்பட்டமை போன்ற ஜே.வி.பி. கட்சியின் செயற்பாடுகளின் ஊடாக அவதானிக்கலாம்.



விமல் வீரவன்ஸ போன்ற கடும்போக்காளர்கள் ஜே.வி.பி. கட்சியில் இருந்து வெளியேறிவிட்ட நிலையில் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சியின் வேட்பாளர் அனுர திஸாநாயக்க முதல் தடவையாக தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதன் அவசியம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்து இருந்த போதிலும் இன்று வரை அனுர திஸாநாயக்க மற்றும் சந்திரசேகரன் போன்ற ஜே.வி.பி. தலைவர்கள் இனப்பிரச்சினை தொடர்பான தமது தெளிவான நிலைப்பாட்டையே அல்லது சாத்தியமான தீர்வு திட்டங்கள் எதையும் வெளிப்படுத்தவில்லை.

ஆயினும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தென்பகுதி வாக்குகள் குறைந்தது 3 கூறுகளாக அல்லது சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி தனியாக தேர்தலை எதிர்கொள்ள முனைந்தால் 4 கூறுகளாக பிரியும் நிலை காணப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அமைப்பதில் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் செல்வாக்கு அதிகரிக்கும்.

அதனால் ஜே.வி.பி. கட்சி கடந்த காலத்தை போலல்லாது சிறுபான்மையினருக்கு கணிசமான அதிகாரப் பகிர்வை வழங்க முன்வரக் கூடும். அதேவேளை தனது எதிர்கால இருப்பை தக்க வைப்பதற்கு ஜே.வி.பி. கட்சி ஊழலுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்க முயலும் போது பணத்தைப் பெற்றுக் கொண்டு மனச்சாட்சிப்படி அரசாங்கத்துக்கு வாக்களித்து வரும் முஸ்லிம் கட்சி உறுப்பினர்கள் மற்றும் எலும்புத் துண்டுகளுக்காக அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் சங்கடத்துக்கு உள்ளாகும் நிலை ஏற்படலாம்.

இவ்வாறான நிலைகளை முன்கூட்டியே கணித்து, தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் முதலில் தமக்குள் ஒற்றுமையான ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தி, ஒன்றுபட்ட குரலில் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பார்களா?



# கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் டக்ளஸின் கருத்தில் உண்மையில்லை




கடலட்டை பண்ணை அமைப்பதில் பிரதேச சபைகளின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என தான் கூறிய கருத்தை மறைத்து ஒரு பகுதியை மாத்திரம் வெளியிட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு பிரதேச சபைகளின் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இல்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஏற்றுக்கொண்டார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தின்போது, சம்பந்தப்பட்ட சட்ட பிரதியை காண்பித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதில் கூறப்பட்டிருந்த சட்ட ஏற்பாடுகளைத் தெளிவுபடுத்துமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார்.

கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் செயற்பாடுகளின்போது, பிரதேச சபைகளின் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை என்பது உண்மை. ஆனால் பிரதேச சபைகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என சட்டத்தில் உள்ளதை அவருக்குக் கூறினேன்.

ஆனால் அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் பிரதேச சபைகளின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என நான் கூறிய கருத்தை மறைத்து ஒரு பகுதியை மாத்திரம் வெளியிட்டுள்ளார்கள். அது அரை உண்மையே ஆகும்.

சட்டத்தின்படி கருத்தைப் பெறுவதென்பது அந்த கருத்துக்களை உள்வாங்கிச் செயற்படுத்துவதே ஆகும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

## அதிவேகமாக நுரையீரலுக்குள் செல்லும் ஒமிக்ரோன் டெல்டாவை விட 70 மடங்கு அதிக வேகத்தில் பரவும்

டெல்டா வகை கொரோனா வைரஸை விட ஒமிக்ரோன் வைரஸ் 70 மடங்கு அதிக வேகத்தில் பரவக்கூடியது என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹொங் கொங் பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்விலேயே இவ்வாறு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவில் முதல்முறையாக கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் வைரஸ் இலங்கை உள்ளடங்கலாக பல்வேறு நாடுகளில் பரவி வருகின்றது.

இதன்காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் டெல்டா வகை கொரோனா வைரஸினை விட ஒமிக்ரான் வைரஸ் 70 மடங்கு அதிக வேகத்தில் பரவக்கூடியது எனவும், டெல்டாவை விட மிகவும் குறைவான உடல் பாதிப்பையே ஒமிக்ரோன் ஏற்படுத்துவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அதிவேகமாக நுரையீரலுக்குள் செல்லும் ஒமிக்ரோன் வைரஸ் டெல்டாவை விட மிகக் குறைவான அளவில் நுரையீரல்களைத் தாக்கும் என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

## மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது

### அரசு திட்டவட்டம்

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் தீர்மானம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கெலிஓயா பகுதியிலுள்ள விகாரை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கைதான 55 இந்திய மீனவர்களையும் உடன் மீட்டுத் தரக் கோரி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் கைதுசெய்யப் பட்ட 55 இந்திய மீனவர்களையும் உடனடியாக மீட்டுத் தரக் கோரி தமிழகத்தில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையின் வட பகுதிக் கடலுக்குள் ஊடுருவிய தமிழகத்தைச் சேர்ந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 55 பேர் 8 படகுகளுடன் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் மீட்டுத்தர வேண்டும் என்றே இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இராமேஸ்வரம் பஸ் நிலையத்திலும், பாம்பன் ரயில் நிலைத்திலும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கச்சதீவை இந்தியா, இலங்கைக்குத் தாரை வார்த்தமையே இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம். எனவே, இந்தியா உடனடியாகக் கச்சதீவை மீட்டே ஆக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.



வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்
74 ஆவது இதழ்
செம்மண்
வெளிவந்துவிட்டது
வாசித்துவிட்டீர்களா?

- ஜோ பைடனுக்குப் பொறுப்பக்கள் அதிகம்
- அடுத்த முதலமைச்சர் தெரிவு மணிவண்ணனா?
- எனது வானூர்திக்குச் சுட்டுக் காலைக் காயப்படுத்திய புலிகள்
- நச்சரிப்புக் காதல் இல்லை
- சிவசின்னங்களில் ஒன்றாகிவிட்டதா ஒலிபெருக்கி...?
மேலும் பல சுவையான அம்சங்களுடன்
உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள் 076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2021 இல் வெளியிடப்பெற்றது.

# இந்தியாவிடம் எதைக் கோரவேண்டும் என்பதை தமிழ்க் கட்சிகள் சிந்தித்து செயற்படல் வேண்டும்

## காணாமல்போனோரின் உறவுகள் கருத்து

இந்தியாவிடம் எதைக் கோர வேண்டுமென்பது தொடர்பாகத் தமிழ்க் கட்சிகள் சிந்திக்க வேண்டியது அவசியமென வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளர் திருமதி கருணாவதி பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அந்த அமைப்பால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளாக ஈழத்தமிழர் உறவுகள் எதிர்பார்த்து நிற்பது சர்வதேச நீதியை. உள்ளகப் பொறிமுறையையும் அல்ல. கலப்புப் பொறிமுறையையும் அல்ல. வலிந்து காணாமலாக்கப்பட்டமை இலங்கைத் தீவில் இன அழிப்பின் ஓர் அங்கமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதைச் சர்வதேசப் பொறிமுறை ஊடாக விசாரிக்குமாறு கோரவேண்டிய தமிழ் அரசியற்தரப்புகள் என்ன செய்துகொண்டிருக்கின்றன?

இதுவரை சர்வதேச நீதிக்கான வாய்ப்பு உருவாகிய போதெல்லாம் அதை நீர்த்துப்போகச் செய்யும் கைங்கரியத்தில் ஈடுபட்டவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் மீண்டும் அமெரிக்கா மற்றும் இந்தியாவுடன் இணைந்து இலங்கை அரசுமீது மேற்குலகம் இந்தியாவின் ஆதரவுடன் கொண்டுவரவுள்ள அடுத்த தீர்மானத்தை இலங்கை அரசு சாதிப்பதற்காகத் தனது இராஜதந்திர நகர்வுகளைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்.

அதேவேளை, பதின்மூன்றாம் சட்டத்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா உதவ வேண்டும் என்று விண்ணப்பிக்க ரெலோவின் வழிகாட்டலில் புளொட், ஈ.பீ.ஆர்.எல்.எவ். மற்றும் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சிகள் ஆரம்பித்துள்ளன.

அதாவது ஓர் அணி பதின்மூன்றை ஆரம்பப் புள்ளியாக வைத்துக்கொண்டு அதற்கு மேலே மெல்லமெல்லச் சென்று ஏதோ சமஷ்டியை எட்டிப்பிடித்துவிடலாம் என்ற ஒரு தவறான திசையை அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் என்று சொல்கிறது. மற்றைய அணி பதின்மூன்றை 1987 இல் இருந்தவாறே அப்படியே தந்தால் போதும் என்று ஏற்னவே தவறாகிப் பாதகமாகிவிட்ட திசையைக் காட்டித் தமிழ்த் தேசியத்தைக் கெடுக்க முயல்கிறது.

பதின்மூன்று என்ற ஒரு பலனற்ற கம்பத்தைப் பிடித்துக்கொண்டு இடப்புறமாக ஓர் அணி சுற்றுவது போலவும் மறு அணி பதின்மூன்று பிளஸ் என்று வலப்பக்கமாகச் சுற்றுவதும் போலவும் அர்த்தமற்ற ஆரம்பப் புள்ளியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு அணிகளும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் தமிழ் மக்களைக் குழப்பி முடக்கியுள்ளன. முரண்பட்டுக்கொண்டிருக்கும் இந்தச் சூழலில், பாதிக்கப்பட்ட தரப்புகளில் ஒன்றான நாம் பொறுப்புக்கூறல் பற்றிய நகர்வுகளை இவர்களின் இந்த நடவடிக்கைகள் பற்றிய எமது கருத்தைத் தெரிவிக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

அதிகாரப் பரவலாக்கத்தை அர்த்தமுள்ள வகையில் செயற்படுத்தும் ஒரு வழிமுறையை இலங்கை அரசியலின் ஒற்றையாட்சி ஒருபோதும் வழங்கப்போவதில்லை. சமஷ்டி என்று கதைப்பவர்கள் ஏன் அதிகாரப் பரவலாக்கம் என்ற சொற்பிரயோகத்தைக் கையாள வேண்டும் என்பதே எமது கேள்வி.

ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்பேசும் மக்களுக்கும் வடக்கும் கிழக்கும் இணைந்த பாரம்பரியத் தாயகம் என்பதை தமிழர் தரப்பு இந்தியாவைப் பகிரங்கமாக அங்கீகரிக்குமாறு கோரவேண்டும்.

அதைப் போலவே, ஒற்றையாட்சி அரசமைப்புக்குள் வடக்கு, கிழக்கு உள்ளடக்கப்படல் ஆகாது என்றும் அது ஒரு சம அந்தஸ்துள்ள சுயாட்சி அரசாக, தனக்கேயுரிய வெளிவிவகார உரிமைகளைப் பெற்றதாக அமைய



வேண்டும் என்றும் இந்தியா அங்கீகரிப்பது அவசியம் என்பதை வலியுறுத்தவேண்டும்.

இந்தியாவிடம் ஈழத்தமிழர்களாக நாம் எதைக் கோரவேண்டும் என்பதில் எம்மைச் சார்ந்து எமது கட்சிகளின் தலைமைகள் சிந்திப்பது அவசியம்.

இந்தியா ஈழத் தமிழர்களுக்கான தனியான வெளியுறவை அங்கீகரிக்கும் வகையில் சில முக்கிய முடிவுகளை எடுக்கவேண்டிய தருணம் இது.

உள்ளகப் பொறிமுறைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் அரசியற் தீர்வுப் பொறிமுறையையே உடனடித் தீர்வாகவும் ஆரம்பப் புள்ளியாகவும் இந்தியா வலியுறுத்த வேண்டுமாறு தமிழர் தரப்புக் கோரவேண்டும்.

அப்போது மாத்திரமே, இங்கே பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கான சர்வதேச நீதிக்கான கதவுகள் திறக்கும். ஒருபோதும் இலங்கையின் ஒற்றையாட்சி சர்வதேச நீதிக்கான கதவுகளை திறக்க அனுமதிக்காது என்பதைப் புரிந்த நிலையில் தமிழர் தரப்புக் கட்சிகளின் முடிவுகள் அமையவேண்டும். - என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரிக்க நடவடிக்கை

## நிதி அமைச்சு தெரிவிப்பு

நாட்டில் குறைந்து வரும் வெளிநாட்டு கையிருப்பை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் அதற்கான திட்டங்களை வகுத்துள்ளார் என நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

இதேவேளை ஆண்டின் இறுதிக்குள் மத்திய வங்கியால் 300 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் வெளிநாட்டு கையிருப்புகளை திரட்ட முடியும் என ஆளுநர் கப்ரால் தெரிவித்துள்ளார்.

# பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி பலியான சிறுமிக்கு நீதி கோரி முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு உடையார்கட்டு வடக்கு மூங்கிலாறு கிராமத்தில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு பின்னர் சட்டவிரோத கருக்கலைப்புக்கு முயற்சித்த போது கொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நீதி கோரி முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மூங்கிலாறு கிராம மக்களால் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் மூங்கிலாறு கிராமத்தில் நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 15 ஆம் திகதி குறித்த சிறுமி காணாமல்போனார் எனப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தாயாரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதற்கு அமைவாக நான்கு நாள்கள் முன்னெடுக்கப்பட்ட தேடுதலின் பின்னர், கைவிடப்பட்ட வளவு ஒன்றில் சிறுமி சடலமாகக் கண்டெடுக்கப்பட்டிருந்தார்.

குறித்த சடலத்துக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையின் அறிக்கை ஞாயிற்றுக்கிழமை வெளியாகியிருந்தது. பிறப்புறுப்பில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக இறப்பு சம்பவித்துள்ளதோடு, இரண்டுமாதம் சிறுமி கருவுற்றும் இருந்து அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி கருத்தரித்த பின்னர் சட்டவிரோதமான முறையில் கருக்கலைப்புக்கு முயற்சித்து அதிக இரத்த போக்கு ஏற்பட்டு சிறுமி உயிரிழந்திருக்கலாம் என்ற கோணத்தில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி கோரியும் சிறுவர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்தக் கோரியும் உயிரிழந்த சிறுமியின் கிராமமான மூங்கிலாறு கிராமத்தின் பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள் அரசியல் செயற்பாட்டாளர்கள் என பலரும் ஒன்றிணைந்து இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மூங்கிலாறு சந்தியிலிருந்து உடையார்கட்டு மகா வித்தியாலயம் வரை பேரணியாகச் சென்று கறுப்பு கொடிகள் மற்றும் கறுப்பு பட்டிகளை அணிந்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒமிக்ரோனைத் தவிர்ப்பதற்கு தடுப்பூசி செலுத்தல் அவசியம்

## சுகாதார அதிகாரிகள் தெரிவிப்பு

ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இலங்கையில் ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டுள்ள நால்வரில் மூவர் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் என சுகாதார அமைச்சின் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்நிலை மோசமாக பாதிக்கப்படவில்லை என்பதால், அவர்களை தீவிர கிசிச்சை பிரிவில் அனுமதிக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஒமிக்ரோனை தவிர்ப்பதற்கு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சீனத் தூதுவர் வடக்கில் தெரிவித்த கருத்தில் கரிசனை கொண்டுள்ளோம்

## சுரேன் ராகவன் தெரிவிப்பு

சீனத்தூதுவர் வடக்கில் தெரிவித்த கருத்தில் கரிசனை கொண்டுள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஓமந்தை மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் சீனத் தூதுவரின் வடக்கு விஜயம் தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் -

இலங்கை சுயாதீனமான சுதந்திரமான நாடு என்ற ரீதியிலும் எங்களுடைய எதிர்காலத்துக்காகவும் வெளிவிவகார உறவை எங்களுடைய நாட்டின் பெருமைக்காகவும் தனித்தன்மைக்காகவும் பாவிக்க வேண்டியதாக உள்ளது.

இலங்கை ஒரு நாட்டின் பகடைக்காயாக மாறக்கூடாது. அண்மையில் இடம்பெற்ற சீனத் தூதுவரின் விஜயம் கேள்விக்குறியாக இருக்கிறது என்பதைவிட அவர் அங்கே கூறிய கருத்துக்கள் எமக்கு கரிசனையாக இருக்கின்றன.

அவை இந்தியாவையும் இலங்கையையும் பகை செய்யும் விடயங்களாக சிலர் ஊடகங்களில் கூறியிருக்கிறார்கள். இந்தியா எங்களுடைய தொப்புள்கொடி உறவு, எங்களுடைய உண்மையான தாய்நாடு, அங்கிருந்து வந்த மதம், மொழி எல்லாமே எங்களுக்குச் சொந்தமாகியிருக்கிறது.



எனவே இந்தியாவுடனான உறவை முறிவடைய விடக்கூடாது என்ற நம்பிக்கையில் நான் இருக்கிறேன். எனவே வருகின்ற நாள்களில் இந்த அரசியல் விடயம் தொடர்ந்து மிகக் கவனமாக இருக்க வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## ‘13’ நமக்கு தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

கேள்வி :- தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் நீங்களும் கலந்து கொண்டமை வியப் பை அளிக்கின்றது. திரு. சுமந்திரன், திரு. கஜேந் திரகுமார் ஆகியோர் 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது என்றும், நீங்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தூக்கிப் பிடிப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்கள். உங்கள் பதில் என்ன?

பதில்:-பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்றுமே தீர்வாகாது என்பதை நான் முற்றிலும் ஏற்கின்றேன். அதுவே தீர்வு என்று நான் எந்தக் காலத்திலும் கூறவில்லை. கூறவும் மாட்டேன். 13 ஆவது திருத்தச் சட்டம் ஒற்றையாட்சியின் கீழ் அமைந்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் (Decentralization) நாங்கள் எங்கள் தீர்வாகாது. சமஷ்டி அடிப்படையில் கேட்பது அதிகாரப் பகிர்வு (Devolution).

எமதுகட்சியின்நிலைப்பாடுகூட்டுசமஷ்டி அரசாங்கம் ஆகும். ஆகவே, சர்வதேச சமூகத்தினால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாக இறுதித் தீர்வினை எமது மக்கள் தெரிவு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் எதிர்பார்ப்பாகும். இதனையே, கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் கூறியிருந்தோம்.

இந்த இளம் அரசியல்வாதிகள் இருவருமே எம் தமிழ் மக்களின் அறிவுசார் நாடாளுமன்றப் பிரதிநிதிகள். நான் கூறுவனவற்றை அவர்கள் புரியாது பேசுகின்றார்களா அல்லது புரிந்தும் அரசியல் காரணங்களுக்காக என் மேல் மக்களிடையே வெறுப்பேற்ற முனைகின்றார்களா என்று எனக்குத் தெரியாது. இருக்கும் சட்டத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் கேட்கின்றோம். தமிழ் மக்களின் அரசியல்த் தீர்வாக அதிகாரப் பகிர்வைக் கேட்கின்றோம்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஆரம்பப் புள்ளியா கவும் ஏற்கமுடியாது. அதிகாரப் பரவலாக்கமும் அதிகாரப் பகிர்வும் இரு சமாந்திரக் கோடுகள். ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பரவலாக்கம் ஒரு திசை என்றால் அதற்கு சமாந்திரமாகவே மறு திசையில் அதிகாரப் பகிர்வு செல்கின்றது. சமாந்திரக் கோடுகள் ஒன்று சேரா. ஆகவே ஒன்று மற்றையதின் ஆரம்பப் புள்ளியல்ல.

எமது கூட்டுக் கட்சிகள் 13 ஆவது திருத்தச் சட்டம் எமது அரசியல் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தர தீர்வாகும் என்று எங்குமே கூறவில்லை. கூறமுடியாது. மாறாக சமஷ்டி அரசியல் யாப்பொன்றே எமக்கு நிரந்தரத் தீர்வளிக்கும் என்று தான் கூறி வருகின்றார்கள். எங்கள் கட்சி, அதாவது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, கூட்டு சமஷ்டி முறையே நிரந்தர தீர்வைத் தரும் என்று கூறுகின்றது.

பின் ஏன் 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தூக்கிப் பிடிக்கின்றீர்கள் என்பதே உங்கள் கேள்வி.

13ஆவதுதிருத்தச்சட்டம்தற்போதைய அரசியல் யாப்பின் ஓர் அங்கம். ஆனால் 1987 இல் அத்திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கியிருந்த பல அதிகாரங்கள் இன்று மத்திய அரசாங்கத்தால் அன்றைய 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க சட்டத்தால் மாகாணசபையின் அதிகாரத்தின் கீழ் வந்த மாவட்ட செயலர், கிராமசேவகர் போன்றோர் மத்தியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். இதனால் மாகாணங்களில் இரு வேறு நிர்வாகங்கள் நடைபெற்று வருகின்றன. (Dual Administration). ஒன்று மத்தியின் நிர்வாகம், மற்றையது மாகாண நிர்வாகம்.

போதாக்குறைக்கு ஆளுநர்களும் தமது அதிகார அலகைப் பலப்படுத்தி வருகின்றார்கள். இதன் காரணத்தினால் எம்மைப்பொறுத்தவரையில் வடக்கு மாகாண சபையின் சொற்ப அதிகாரங்களைக் கொண்டு ஓரளவுக்கு கட்டுப்படுத்தக் கூடிய காணி அபகரிப்பு, எமது வளங்களின் சூறையாடல், எமது உள்ளூர் மீனவ மக்களின் பிரச்சினைகள், இராணுவத்தினால் ஏற்படும் தலையீடுகள் - சிக்கல்கள் போன்றவை, பௌத்த மதமாற்றங்கள், பௌத்தர் இல்லாத இடங்களில் பௌத்த மதத் தலங்களைக் கட்டல் மற்றும் வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கல் போன்ற பலதையும் நாம் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாகாணசபை தேர்தல்கள் நடக்காது இன்றைய நிலை தொடர்ந்தால் வடமாகாணம் மிக விரைவில் மத்தியின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் சிங்கள மயமாகி விடும். அதன்பின் நாங்கள் சமஷ்டிக்கோ, கூட்டுச் சமஷ்டிக்கோ, சுய நிர்ணய உரிமைக்கோ போராடுவது அர்த்தமற்றதாகப் போய்விடும்.

மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறாததால் ஒட்டுமொத்த சிறுபான்மையினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் தான் மலையக மற்றும் முஸ்லிம் மக்கள் தலைவர்களும் எம்முடன் சேர்ந்து இந்தக் காரியத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

இன்றைய நிலையில் சட்ட ரீதியாகத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இருக்கும் ஒரே பிடிமானம் போதிய அதிகாரமற்ற இந்த 13 ஆவது திருத்தச் சட்டமே. அதை நீக்கினால் மத்திய அரசாங்கம் துணிந்து வடகிழக்கை ஆக்கிரமித்துவிடும். இதை இவ்வாறு கூறியதை, ஒருவர் பிழையாகப் புரிந்து கொண்டு இந்தியாவிற்கு இருக்கும் ஒரே பிடிமானம் 13 ஆவது திருத்தச் சட்டமே என்று நான் கூறினேன் என என்னை விமர்சித்துள்ளார்.

அரசியல் ரீதியான ஒரு தக்க தீர்வைப் பெறும் வரையில் தற்போதிருக்கும் சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தும் படி நாங்கள் கோர வேண்டும். இதுகாறும் பலர் கேட்டும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த மத்திய அரசாங்கம் முன்வரவில்லை. எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் 1987 ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோருவதற்கு இந்தியாவிற்கே உரிமை உண்டு. நாங்கள் அதில் கையெழுத்திடவில்லை. சிறுபான்மையர் சார்பில் இந்தியாவே கைச்சாத்திட்டது. ஆகவே அவர்களின் அந்த உரித்தை அவர்கள் பாவிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை. ஆனால் இந்தியா இலங்கை விடயங்களில் உள்நுழைய 13 ஆவது திருத்தச்சட்டம் தவிர்ந்த பல உடன்பாடுகளும் சர்வதேசச் சட்டக் கொள்கைகளும் இருக்கின்றன. ஆகவே இந்தியாவிற்கு இருக்கும் ஒரே பிடிமானம் 13 ஆவது திருத்தச் சட்டமே என்று நான் கூறவில்லை. எமக்கிருக்கும் ஒரேயொரு பிடிமானம் 13 ஆவது திருத்தச்சட்டமே என்றுதான் நான் கூறினேன்.

1948 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் படி எமக்கிருந்த ஒரேயொரு பிடிமானம் உறுப்புரை 29(2)ஆக இருந்தது. அதை மீறியே சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனை அப்போதைய மாவட்ட நீதிபதி டி. க்ரெட்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார். அன்று அரசாங்கம் சட்டத்தை மீறி நடந்து கொண்டது போலவே இன்று மாகாணசபைத் தேர்தல்களை நடத்தாது 13 ஆவது திருத்தச்சட்டத்தைப் புறக்கணித்து வருகின்றனர். ஆகவே 13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் இன்றைய அவலநிலையில் மாற்றம் ஏற்படுத்தத் தேவையாக உள்ளது.

நாம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை எமது பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஏற்கவில்லை. ஏற்கவும் மாட்டோம். ஏற்கனவே சட்டப் புத்தகத்தில் இருக்கும் சில சரத்துக்களை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்று அரசாங்கத்திடம் கேட்பதே எமது குறிக்கோள். இன்று வரை சிங்களவர்களும் தமிழர்களும் இது பற்றிக் கேட்டும் பயன் கிடைக்கவில்லை. ஆகவே சட்டப் புத்தகத்தில் இருக்கும் எமது உரிமைகளை எமக்குத் தாருங்கள் என்று தகுந்தவர் மூலம் கேட்பது சமஷ்டியையோ கூட்டு சமஷ்டியையோ நாம் கைவிட்டதாகப் பொருள்படாது. ஒற்றையாட்சியின் கீழ் எமது அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது. ஆனால் சில முக்கிய நடைமுறைப் பிரச்சினைகளை, பதின்மூன்றாம் திருத்தச்சட்ட அமுலாக்கத்தின் ஊடாக நாம் கையாளலாம்.

மக்களின் தற்போதைய அவல நிலையில் சில மாற்றங்களைக் கொண்டு வருவதே எமது எதிர்பார்ப்பு. அதற்கு இந்தியாவின் உள்ளீடு எமக்குத் தேவையாக உள்ளது. சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி அரசியல் யாப்பைப் பெற சர்வதேச ரீதியாக நாம் போராட வேண்டும். வட கிழக்கு மக்களின் அபிலாஷைகளை நாம் மக்கள் தீர்மானம் ஒன்றின் மூலம் பெறப் போராட வேண்டும். அப் போராட்டத்தில் எமது புலம் பெயர்ந்த உறவுகளும் கலந்து கொள்வார்கள். ஆனால் இந்தப் போராட்டத்தில் இங்கிருக்கும் சிறுபான்மையர் அனைவரும் சேர்ந்தே நடவடிக்கை எடுக்கவுள்ளோம். - என்று உள்ளது.

## மக்கள் ஆணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்றுக் காலையும் மாலையும் இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது.

கொழும்பில் சம்பந்தன் எம்.பியின் இல்லத்தில் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை முதல் அமர்வு இடம்பெற்றது.

மாலை அமர்வு மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி, முன்னிரவு வரை நீடித்தது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இரா.சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன், சத்தியலிங்கம், இ.சிறிதரன், சி.வீ.கே.சிவஞானம், குலநாயகம், கலையரசன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராஜா, துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வராமையால் செல்வராஜா இக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

இதற்கிடையில் -

‘13 பு யின் நடைமுறையாக்கத்துக்கான கடிதம் தொடர்பான கலந்துரையாடலும், ஒப்பமிடுதலும்’ என்ற தலைப்பில் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அழைத்துள்ள கூட்டம் இன்று முற்பகல் கொழும்பு, வெள்ளவத்தை, மரைன் டிரைவில் உள்ள குளோபல் டவர் ஹோட்டலின், அரங்க மண்டபத்தில் நடைபெறுகின்றது.

கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் மனோ கணேசன், மாவை சேனாதிராசா, நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், சுரேஷ் பிறேமச்சந்திரன், என். ஸ்ரீகாந்தா ஆகிய கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தின் காலை அமர்வில் இன்று நடைபெறும் மேற்படி தமிழ்க் கட்சிகளின் கூட்டம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சம்பந்தனோடு சுமந்திரனும் பங்குபற்ற வேண்டும் என அரசியல் குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் வலியுறுத்தினர்.

சுமந்திரனுடன்தான் மேற்படி கூட்டத்தில் வந்து தாம் பங்குபற்றுவார் என ஏற்பாட்டாளர்களுக்கு ஏற்கனவே தாம் அறிவித்து விடேன் என்றார் சம்பந்தன்.

யுத்தத்தின் பின்னர் கடந்த பன்னிரண்டு வருட காலத்தில் நடைபெற்ற பல்வேறு தேர்தல்களில் கூட்டமைப்பாக தமிழரசின் நிலைப்பாடு தேர்தல் விஞ்ஞாபனங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கே நமது தமிழ் மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் ஆணை தந்துள்ளனர். அந்த ஆணையைப் பிரதிபலிக்கும் விதத்தில் இன்றைய தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் ஆவ ணம் தயாரிக்கப்பட்டிருந்தால் மட்டுமே அதில் தமிழரசுப் பிரதிநிதிகளான மாவை சேனாதிராசாவும் மற்றும் சம்பந்தனும் கையெழுத்திட வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மக்களிடம் தமிழரசுக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனங்கள் மூலம்பெற்ற ஆணைக்கு அமைவாக அந்த ஆவணத்தை ஒழுங்குபடுத்துவதை சுமந்திரன் விசேடமாகக் கவனிக்க வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலை சட்ட வைத்திய அதிகாரி ஆர். தனுசன் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்கள முன்பள்ளி ஆசிரியரான நிலகரட்ண ஜெயசீலி (வயது - 32) என்ற மூன்று பிள்ளைகளின் தாயார் நேற்றுமுன்தினம் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கிளிநொச்சி, விநாயகபுரம் - இயக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த இவர், கணவனைப் பிரிந்து வாழும் நிலையில் தனது தொழிலின் நிமிர்த்தம் ஜெயந்திநகர் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார்.

வழமையாக இரவு நேரத்தில் இவரது மூத்த இரு பிள்ளைகளும் இவரது நண்பியின் வீட்டில் தங்கி வந்துள்ளனர். சம்பவம் இடம்பெற்ற இரவும் வழமைபோல இரண்டு பிள்ளைகளும் நண்பி வீட்டுக்குச் சென்றுள்ளனர். கடைசிப் பிள்ளை குறித்த பெண்ணுடனேயே தங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் திடீர் மரண விசாரணை அதிகாரி சிங்கராசா ஜீவநாயகம் விசாரணை மேற்கொண்டிருந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. அதனடிப்படையில் நேற்று பிரேத பரிசோதனை இடம்பெற்றது.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் குறித்த பெண்ணின் மரணத்தில் பலத்த சந்தேகம் எழுந்துள்ள காரணத்தால் சட்ட வைத்திய அதிகாரி நேற்று சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரூபாவாக (20 ரூபாவால்) அதிகரித்துள்ளது.

ஒரு லீற்றர் ஒக்டைன் 95 வகையைச் சேர்ந்த பெற்றோலின் விலை 184 ரூபாவிலிருந்து 207 ரூபாவாக (23 ரூபாவால்) அதிகரித்துள்ளது.

ஒடோ டீசல் ஒரு லீற்றரின் விலை 111 ரூபாவிலிருந்து 121 ரூபாவாக (10 ரூபாவால்) அதிகரித்துள்ளதுடன், சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 144 ரூபாவிலிருந்து 159 ரூபாவாக (15 ரூபாவால்) அதிகரித்துள்ளது.

இதேவேளை, மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 77 ரூபாவிலிருந்து 87 ரூபாவாக (10 ரூபாவால்) அதிகரிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட் டத்துக்கான வாக்கெடுப்பு தொடர்பான கூட்டம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகியது.

இதன்போது மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.எம் முஜாஹிரா? அல்லது உப தவிசாளராக இருந்த முஹமட் இஸ்ஸதீன்? என்ற பாரிய இழுபறி நிலைமை சபை உறுப்பினர்களுக்கிடையில் காணப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், கலவரமாக மாறிய நிலையில் பிரதேச சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.

இதன்போது மன்னார் பிரதேச சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பெண் உறுப்பினரான ஆசிரியர் றோமன் டிப்னா, இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் பாலச்சந்திரன் கதிர் காமநாதனுடன் தர்க்கத்தில் ஈடுபட்டதோடு, மேசையில் இருந்த ஒலிவாங்கியைத் தூக்கி தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் பாலச்சந்திரன் கதிர் காமநாதன் மீது தாக்கி தீய வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

குறித்த ஒலிவாங்கியைப் பறித்து தாக்க முயற்சிசெய்தபோது சபையில் இருந்தவர்கள் பிடித்து சமாதானப்படுத்தியுள்ளனர்.

இந்தநிலையில் மன்னார் பிரதேச சபையின் தற்போதைய தலைவர் சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபையின் 42ஆம் மற்றும் 43 ஆம் சபை அமர்வுகளில் சபையின் தவிசாளர் யார் என்ற சந்தேகம் எழுந்ததால் அமர்வுகளில் இருந்து எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

மன்னார் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அமர்வின்போது நேற்று ஏற்பட்ட தர்க்க நிலையின்போது ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பெண் உறுப்பினரான ஆசிரியர் றோமன் டிப்னா மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் பாலச்சந்திரன் கதிர் காமநாதன் ஆகியோர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.